Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 41
கதிர் : 143

சனிக்கிழமை
18 ஏப்ரல் 2026

சித்திரை 05 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2057

பக்கங்கள் –16
விலை – ரூபா 50

## நாளை மறுதினம் பரவலாக மழை

கொழும்பு, ஏப். 18
நாட்டின் பல்வேறு பகுதிகளில் நாளைமறு தினத்தில் இருந்து அடுத்த சில நாள்களுக்கு மழையுடனான காலநிலை காணப்படும் என்று, இலங்கை வளிமண்டலவியல் திணைக் களம் தெரிவித் துள்ளது. »14



## மே 15ஆம் திகதிக்கு முன் மீண்டும் அளவீட்டுப் பணி!

### மாவட்டச் செயலர் உறுதி

யாழ்ப்பாணம், ஏப். 18
அனைத்துத் தரப்பினரையும் ஒருங்கிணைத்து, மே மாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் மீண்டும் காணி அள வீடு செய்யப்படும் என்று யாழ். மாவட்டச் செயலர் மருதலிங்கம் பிரதீபன் ஆக்கிரமிக் »14

### திஸ்ஸ விகாரைப் பிக்குவின் எதிர்ப்பால்

# கைவிடப்பட்டது காணி அளவீடு!

யாழ்ப்பாணம், ஏப்ரல் 18
தையிட்டி திஸ்ஸ விகாரைக்காக ஆக்கிரமிக்கப்பட்ட காணி களை விடுவிக்கும் நோக்கில் நேற்று அளவீட்டுப் பணிகள் இடம்பெறவிருந்த நிலையில், திஸ்ஸ விகாராதிபதி அதற்குச் சம்ம தம் தெரிவிக்காததைத் தொடர்ந்து அந்த நடவடிக்கைகள் கைவிடப் பட்டன. »15

## வரி வருமான மேம்பாடு; இலங்கை முன்னேற்றம்

### நாணய நிதியம் பாராட்டு

கொழும்பு, ஏப். 18
கடந்த மூன்று ஆண்டுக ளில் இலங்கை அதன் வரி வருமானத்தை மேம்படுத் துவதில் முன்னேற்றம் கண்டுள்ளது என்று சர்வ தேச நாணய நிதியம் பாராட்டியுள்ளது.
சர்வதேச நாணய நிதிய ஆசிய, பசுபிக் திணைக்க ளத்தின் பணிப்பாளர் கிருஷ்ணா ஸ்ரீனிவாசன் இது தொடர் பில் தெரிவித் »14

## இனப்பிரச்சினைத் தீர்வுக்கு விசேட வழிநடத்தல் குழு!

யாழ்ப்பாணம், ஏப். 18
தமிழ்த் தேசியப் பேரவையால் கடந்த பெப் ரவரி மாத நடுப்பகுதியில் நடத்தப்பட்ட கலந்துரையாடலின்போது, இனப்பிரச்சி னைக்குத் தீர்வாக தமிழர் தரப்பின் நிலைப்பாட்டைக் கூட்டாக முன்வைப்ப தற்கும், தீர்வுத்திட்ட வரைவைத் தயாரிப்ப தற்கும் இணக்கப்பாடுகள் எட்டப்பட்டி ருந்த நிலையில், அந்தப் பணிகளுக்காக 28 பேர் அடங்கிய வழிநடத்தல் குழு அமைக்கப்பட்டுள்ளது.
இந்த விடயம் தொடர்பில், ஈழத்தமிழர் அரசியலமைப்பு நிர்ணய பொதுச்சபை யின் ஒருங்கிணைப்பாளர் கலாநிதி தி.விக் னேஸ்வரனால் வெளியிடப் பட்டிருக்கும் அறிக்கையில் »14

### இன்றிலிருந்து

## மீண்டும் கியூ.ஆர்.

கொழும்பு, ஏப். 18
எரிபொருள் விநியோகத் தில் இன்றுமுதல் மீண் டும் கியூ.ஆர். முறைமை பின்பற்றப்படும் என்று இலங்கைப் பெற்றோலி யக் கூட்டுத்தாபனம் அறி வித்துள்ளது.
புத்தாண்டுப் பண்டிகைக் »15

### இரணைதீவில் கைதான

## இந்திய மீனவர்களுக்கு விளக்கமறியல் நீடிப்பு!

கிளிநொச்சி, ஏப். 18
கிளிநொச்சி – இரணைதீவு கடற்பரப்பில் கைது செய் யப்பட்ட இந்திய மீனவர்கள் 14 பேரையும், எதிர்வரும் 22ஆம் திகதிவரை விளக் கமறியலில் வைக்குமாறு கிளிநொச்சி மாவட்ட நீதி வான் நீதிமன் றம் உத்தரவிட் »14



### புன்னாலைக்கட்டுவனில்

## வாள்களுடன் மூவர் கைது!

யாழ்ப்பாணம், ஏப். 18
சுன்னாகம் பொலிஸ் பிரி வுக்கு உட்பட்ட புன்னா லைக்கட்டுவன் பகுதி யில், வாள் களுடன் »14

### நிலக்கரி மோசடி

## பதவி விலகினார் வலுசக்தி அமைச்சர்

### அமைச்சின் செயலாளரும் பதவி துறப்பு



கொழும்பு, ஏப். 18
வலுசக்தி அமைச்சராக பதவி வகித்து வந்த குமார ஜயக்கொடி மற்றும் அமைச்சின் செய லாளராக பணியாற்றிய உதயங்க ஹேமபால ஆகியோர் நேற்றுப் »14


## பேருந்து – ஓட்டோ விபத்து; முதியவர் பரிதாபச் சாவு!

முல்லைத்தீவு, ஏப். 18
புதுக்குடியிருப்பு – பரந்தன் ரெட்பானா சந்தியில், இ.போ.ச. பேருந்தும் ஓட் டோவும் மோதி விபத்துக்கு உள்ளானதில் படுகாயம் அடைந்த முதியவர், மேல திக சிகிச்சையின்போது நேற்று உயிரிழந்தார்.
கட்டயன் ராமலிங்கம் (வயது-74) என்ற முதிய »14



முரசந்தி முரளி

"ஒரேயொரு பிக்குவுக்கு இந்த நாட்டு நிர்வாகக்காரர் எப்பிடி பயப்பிடுகினம் எண்டு பாருங்கோ"



## அன்னை பூபதிக்கு கரைச்சியில் அஞ்சலி

கிளிநொச்சி, ஏப். 18
அன்னை பூபதியின் 38ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு கிளிநொச்சி கரைச்சி பிரதேசசபையில் நேற்று முன்னெடுக்கப்பட்டது. »14

மக்கள் [illegible] தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# முதலாம்தர கல்விச்சீர்திருத்தம் மாத இறுதிக்குள் பயிற்சிநூல்கள்



கொழும்பு, ஏப். 18

**2026ஆம் ஆண்டுக்கான புதிய கல்விச் சீர்திருத்தங்களுக்கு அமைய, முதலாம் தர மாண வர்களுக்கான கற்றல் நடவடிக்கைகளை மேம்படுத் தும் பணிகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளதாகக் கல்வி அமைச்சின் செயலாளர் நாலக்க கலுவெவ தெரி வித்துள்ளார்.**

மாணவர்களின் இரண்டாம் மற்றும் மூன்றாம் தவணைகளுக்கான விசேட பயிற்சி நூல்கள் விநியோகிக்கும் பணிகள் தற்போது நாடு முழுவதும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

எதிர்வரும் ஏப்ரல் 30ஆம் திகதிக்குள் அனைத்துப் பாடசாலைகளுக்கும் இந்தப் பயிற்சி நூல்கள் சென்றடைவதை உறுதி செய்யுமாறு அதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டுள் ளது.

புதிய பாடத்திட்டத்தை வினைத்திறனாகக் கற்பிப்பதற்கு ஆசிரியர்களைத் தயார்ப்படுத்தும் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

ஏற்கனவே மாகாண ஆரம்பக் கல்விப் பணிப்பாளர்கள் மற்றும் ஆசிரிய ஆலோசகர்களுக்கும் பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-இ)

## ரூ. 400 கோடி பெறுமதியான போதைப்பொருள் மீட்பு!

கொழும்பு, ஏப்.18

தெற்கு ஆழ்கடல் பகுதியில் நேற்றுமுன்தினம் மேற்கொண்ட விசேட நடவடிக்கையில் கைப்பற்றப்பட்ட நெடுநாள் மீன்பிடிப் படகில் இருந்து 400 கோடி ரூபாவுக்கும் அதிக பெறுமதியுடைய ஹெரோய்ன் போதைப்பொருள் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

போதைப் ஒழிப்புப் பிரிவினர் நடத்திய சோதனையில் படகில் இருந்தது ஹெரோய்ன் போதைப்பொருள் என்பது உறுதிப்படுத்தப்பட்டதுடன், 150 கிலோவுக்கும் அதிக போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது.

படகில் இருந்த நால்வர் கரைக்குக் கொண்டுவரப்பட்டு கைது செய்யப்பட்டுள்ளனர். (எ-இ)

## நான்கு நாள்களில் மட்டும் 20 பேர் நீரில் மூழ்கிச் சாவு



கொழும்பு, ஏப்.18

கடந்த 12ஆம் திகதி முதல் 16ஆம் திகதிவரையான நான்கு நாள்களில் மட்டும் 20 பேர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் எஃப்.யு. வுட்லர் தெரிவித்ததாவது-

நீச்சல் தெரியாமை, ஆள் நடமாட்டமற்ற பாதுகாப்பற்ற இடங்களில் நீராடுதல் மற்றும் மதுபோதையில் நீரில் இறங்குதல் ஆகியவையே இத்தகைய மரணங்களுக்கு முக்கிய காரணங்களாகும். பொதுமக்கள் நீராடுவதற்கு முன்னர் அதற்காக ஒதுக்கப்பட்ட பாதுகாப்பான இடங்களைத் தேர்வு செய்ய வேண்டும். உயிர்காப்புப் பிரிவினர் பணியில் இருக்கும் இடங்களை உறுதிப்படுத்திக் கொள்வதுடன், அங்குள்ள எச்சரிக்கைப் பலகைகள் மற்றும் அறிவுறுத்தல்களைக் கண்டிப்பாகப் பின்பற்ற வேண்டும்.

புத்தாண்டு விடுமுறை காலப்பகுதியில் இவ்வாறான அனர்த்தங்கள் அதிகரித்துள்ளதால், நீர்நிலைகளில் இறங்கும் போது மிகுந்த அவதானத்துடன் செயற்பட வேண்டும்-என்றார். (எ-இ)

## இ.போ.ச. பேருந்துகளில் புதிய கட்டண முறைமை

### விரைவில் அறிமுகம்

கொழும்பு, ஏப். 18

இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ்களில் பயணக் கட்டணங்களைச் செலுத்துவதற்கு இனிவரும் காலங்களில் பணத்துக்குப் பதிலாக அட்டைகளை மட்டுமே பயன்படுத்தும் முறைமை நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாக அதன் தலைவர் சஜீவ கனகரத்ன தெரிவித்துள்ளார்.

இந்த அட்டை முறைமை எதிர்வரும் சில மாதங்களுக்குள் இ.போ.ச சேவையில் முழுமையாக அறிமுகப்படுத்தப்படும். இதற்கான தொழில்நுட்ப ரீதியான அனைத்து ஏற்பாடுகளும் தற்போது பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

பயணிகளுக்கும் நடத்துநர்களுக்கும் இடையே ஏற்படும் சில்லறைப் பணப் பிரச்சினைகளுக்கு இது நிரந்தரத் தீர்வாக அமையும். பஸ் கட்டண வசூலிப்பில் ஏற்படும் முறைகேடுகள் தவிர்க்கப்பட்டு, வருமானம் நேரடியாகச் சபையைச் சென்றடையும். இலங்கையின் பொதுப் போக்குவரத்துச் சேவையை முழுமையாக டிஜிற்றல் மயமாக்குவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார். (ச-இ)

## ஆபத்தான வீதிச் சாகசங்கள் கடுமையான சட்டம் பாயும்!

கொழும்பு, ஏப். 18

வீதிகளில் 'ஹீரோ' ஆகக் காட்டிக்கொள்ள முயலும் இளைஞர்களுக்குப் பொலிஸார் கடும் எச்சரிக்கை விடுத்துள்ளனர். மோட்டார் சைக்கிளின் முன் சக்கரத்தை உயர்த்தியும், முச்சக்கர வண்டிகளை இரு சக்கரங்களில் ஓட்டியும் சாகசம் செய்ய வேண்டாம். மதுபோதை அல்லது போதைப்பொருள் பாவனையுடன் வாகனம் செலுத்துவோருக்கு எதிராகக் கடுமையான குற்றவியல் சட்டங்கள் பாயும். வீதி விதிமீறல்கள் அல்லது அதிக புகையை வெளியிடும் வாகனங்கள் தொடர்பாக 070 355 2525 என்ற தொலைபேசி இலக்கத்துக்கு பொதுமக்கள் தகவல்களை அனுப்பலாம். இதுவரை கிடைத்த 23 காணொலி சம்பவங்களில் 11 சம்பவங்கள் மீது உடனடி நடவடிக்கை எடுக்கப்பட்டு வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன என்றும் பொலிஸார் குறிப்பிட்டனர். (ச-இ)



# வீதியில் காத்திருப்போருக்கு நிழலாக படங்குகள் விரிப்பு!

யாழ்ப்பாணம், ஏப்.18

யாழ். மாவட்டத்தில் நிலவும் அதிகரித்த வெப்பமான காலநிலையைக் கருத்தில்கொண்டு, வீதிச்சமிக்ஞை விளக்குகள் பொருத்தப்பட்டுள்ள திருநெல்வேலிச் சந்திக்கு மேற்புறமாக சாக்குப் படங்குகள் பொருத்தப்பட்டுள்ளன.

நல்லூர்ப் பிரதேச சபையின் தவிசாளர் பத்மநாதன் மயூரனின் முயற்சியில் பரீட்சார்த்தமாக இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

பலாலி மற்றும் ஆடியபாதம் வீதிகள் ஊடாகப் பயணிக்கும் மக்கள் சமிக்ஞை விளக்குகளின் வழிப்படுத்தலுக்காக, சிறிதுநேரம் வெய்யிலில் காத்திருக்க வேண்டியுள்ளது.

அதனால் திருநெல்வேலிச் சந்திக்கு மேற்குப் பக்கமாக மரங்கள் நிற்பதால், அப்பகுதி தவிர்ந்த ஏனைய மூன்று திசைகளின் மேற்புறமாகவும் படங்குகள் நிழலுக்காகப் பொருத்தப்பட்டுள்ளன. (எ-இ)

## புகை தள்ளும் வாகனங்களை கண்டால் அறிவியுங்கள்!

கொழும்பு, ஏப். 18

வீதிகளில் அதிகளவில் கரும்புகையை வெளியேற்றி, சுற்றுச்சூழலுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் வாகனங்களை அடையாளம் கண்டு, அவற்றுக்கு எதிராகக் கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என பொலிஸ் போக்குவரத்துக் கட்டுப்பாட்டுப் பிரிவு அறிவித்துள்ளது.

வீதிகளில் இவ்வாறான வாகனங்களைக் கண்டால், பொதுமக்கள் அது குறித்து உடனடியாக முறைப்பாடு செய்யலாம். பொதுமக்கள் 070 3500525 என்ற வட்ஸ்அப் இலக்கத்துக்கு வாகனத்தின் இலக்கம் அல்லது காணொலிக் காட்சிகளை அனுப்பி வைக்க முடியும். மோட்டார் வாகனப் பரிசோதகர்களுடன் இணைந்து, அதிக புகை வெளியேற்றும் வாகனங்களைப் பொலிஸார் சோதனையிடவுள்ளனர். விதிமீறும் வாகனங்கள் உடனடியாகப் பொலிஸ் பொறுப்பில் எடுக்கப்பட்டு மேலதிக சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




### 44 பில்லியன் ரூபா பெறுமதியான

# 1,800 கிலோ போதைப்பொருள் இந்த ஆண்டில் மட்டும் மீட்பு!

கொழும்பு, ஏப். 18

**இந்த ஆண்டின் முதல் மூன்று மாத காலப்பகுதியில் மட்டும் சுமார் 1,800 கிலோகிராமிற்கும் அதிகமான போதைப்பொருள்கள் மீட்கப்பட்டுள்ளன. கைப்பற்றப்பட்ட போதைப்பொருள்களின் மொத்தப் பெறுமதி 44 பில்லியன் ரூபாவுக்கு அதிகம் என மதிப்பிடப்பட்டுள்ளது என்று கடற்படை ஊடகப் பேச்சாளர் கப்டன் புத்திக சம்பத் தெரிவித்துள்ளார்.**

அதேவேளை இதே காலப்பகுதியில் மட்டும் போதைப் பொருள் கடத்தலில் ஈடுபட்ட 10 இலங்கை மீன்பிடிப் படகுகள் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளன. கடல் மார்க்கமாக நாட்டுக்குள் போதைப்பொருட்கள் ஊடுருவுவதைத் தடுப்பதற்காக, இலங்கையைச் சூழவுள்ள கடற்பரப்பில் அதிநவீன தொழில்நுட்பங்கள் மற்றும் ரோந்துப் படகுகள் மூலம் தொடர்ச்சியான கண்காணிப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

## துப்பாக்கிச்சூடு

ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளியான 'லொகு பெட்டி'யின் சகோதரரான 'பொடி பெட்டி' என்பவரை இலக்கு வைத்து அஹுங்கல்லை பகுதியில் துப்பாக்கிச் சூடு நேற்றுமுன்தினம் நடத்தப்பட்டுள்ளது.

'பொடி பெட்டி' என்பவர் முச்சக்கர வண்டியில் பயணித்துக் கொண்டிருந்தபோது, இனந்தெரியாத நபர்களால் இந்த துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது. இதில் அவருக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் ஆரம்பித்துள்ளனர். (ச-இ)

### 5 நாள்களில் மட்டும்

## 42 வீதி விபத்துகளில் 44 பேர் உயிரிழப்பு!

கொழும்பு, ஏப். 18

இம்மாதம் ஏப்ரல் 10 ஆம் திகதி முதல் 15 ஆம் திகதிவரையான காலப்பகுதியில் நாடளாவிய ரீதியில் 42 வீதி விபத்துகள் பதிவாகியுள்ளதுடன் அதில் சிக்கி 44 பேர் உயிரிழந்துள்ளனர் என போக்குவரத்துக் கட்டுப்பாடு மற்றும் வீதிப் பாதுகாப்புப் பிரிவுக் குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபர் சேனாதீர தெரிவித்துள்ளார். கடந்த ஆண்டு புத்தாண்டு காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில், இம்முறை விபத்து உயிரிழப்புகள் ஓரளவு குறைவடைந்துள்ளன.

கடந்த ஆண்டு ஏப்ரல் 13, 14, 15 ஆகிய மூன்று நாள்களில் 26 மரணங்கள் பதிவாகியிருந்தன. இம்முறை அது 19 ஆகக் குறைந்துள்ளது. எனினும், 10 ஆம் திகதி முதல் 15 ஆம் திகதிவரையான ஐந்து நாள்களுக்குள் உயிரிழப்பை ஏற்படுத்தக் கூடிய 42 விபத்துகள் பதிவாகியுள்ளதுடன் 44 பேர் உயிரிழந்துள்ளனர். அவ்வாறு உயிரிழந்தவர்களில் பெரும்பாலானோர் மோட்டார் சைக்கிள் ஓட்டுநர்களாவர் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

## மரண அறிவித்தல்

பிறப்பு
14 • 01 • 1957



இறப்பு
16 • 04 • 2026

### மனோகரன் நிர்மலா

மாரியம்மன் கோவிலடி சுதுமலை தெற்கு ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மனோகரன் நிர்மலா அவர்கள் கடந்த 16.04.2026 வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் மனோகரனின் (செயலாளர் நோயாளர் நலன்புரிச்சங்கம் - பிரதேச வைத்தியசாலை - மானிப்பாய்) அன்பு மனைவியும், காலஞ்சென்ற சீவன்சன் (சிபி) மற்றும் சிந்துஜா (பிரான்ஸ்), லாவன்சன் (ஆங்கில ஆசிரியர் - கிளி/ பூநகரி மத்திய கல்லூரி) ஆகியோரின் அன்புத் தாயாரும், முரளிதாஸ் (பிரான்ஸ்) அவர்களின் அன்பு மாமியாரும், வைஷ்ணவி (பிரான்ஸ்) அவர்களின் அன்பு பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான அம்பலவாணர் - மனோன்மணி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான இராசையா - ரத்தினம் தம்பதியரின் அன்பு மருமகளும், சியாமளா, ஆனந்தராஜா (சுவிஸ்), நேசராஜா (பிரான்ஸ்), மஞ்சுளா, பிறேமளா, மேகலா, கௌசலா ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (19.04.2026) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் முற்பகல் 11.00 மணியளவில் தகனக்கிரியைகளுக்காக வண்ணார் பண்ணை கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

மாரியம்மன் கோவிலடி,
சுதுமலை தெற்கு,
ஆனைக்கோட்டை.

தகவல்:
குடும்பத்தினர்
077 750 8601
077 011 9808

## கோடைகாலத்தில கொடை!

கபாலத்துக்குள்ள இருக்கிற மூளையே கரைஞ்சு ஒழுகிற மாதிரி வாட்டியெறியிற இந்த வெயிலுக்க றோட்டால போய் வாறதெண்டது, தீமிதிக் கிறதை விட கடுமையான காரியம் தான். அதிலையும் உந்தக் காப்பெற் றோட்டால போகேக்க, மேல இருந்து வாற வெயிலோட காப்பெற்றில இருந்து வாற வெக்கையும் சேர்ந்தால் எந்தப்பெரிய வில்லாதி வில்லனும் வாடி வதங்க வேண்டியதுதான். நிழல் எண்டது மருந்துக்கும் இல்லை. அதால இப்ப எல்லாரும் றோட்டில நிக்காமல் பறந்தடிச்சுக்கொண்டு போகினம். எல்லாம் றோட்டுக்கரையளில நிண்ட மரங் களை வெட்டித்தறிச்ச பாவம் இப்ப இப்பிடி அனல்வெக்கையா வந்து பழிவாங்குது. அதிலையும் ஆகப்பெரிய தண்டனை என்னெண்டால் சில முக்கியமான சந்தியளில இருக்கிற 'ட்ரபிக் சிக்னல்' தான்.

உந்தச் சிக்னல் சந்தியளில சிவப்பு லைற் விழுந்திட்டுதெண்டால், பிறகு திரும்ப பச்சை லைற் எரியும் மட்டும் குறைஞ்சது ஒரு நிமிசமாவது ஒரே இடத்தில நிக்கோணும். அதுவும் பகல்பத்து மணிக்குப்பிறகு இப்பிடி வெட்டவெளிச் சந்தியில, காப்பெற் றோட்டில, உச்சியில சூரியன் நிக்கிற நேரத்தில ஒரே இடத்தில நிக்கிறதும் ஒண்டுதான், பாண் போறணைக்குள்ள ஏறிப் படுக்கிறதும் ஒண்டுதான். சில இடங்களில பச்சை லைற் எரியுறதுக்குள்ள ஆக்களுக்கு கிறுதி வந்து விழுத்திடும் போல இருக்கும். நல்ல காலத் துக்கு அப்பிடியொரு அசம்பாவிதமும் இன்னமும் நடக்கேலை. இப்பிடி சிக்னல் சந்தியள் என் டாலே கதிகலங்க வைக்கிற இந்தக் கோடை காலத்தில நல்லூர்ப் பிரதேச சபை ஒரு நல்ல வேலைசெய்திருக்கு.

திருநெல்வேலிச் சந்தியில சிக்னலில நிக்கிறவை வெயிலில வாடிவதங்கக்கூடாது எண்ட நல்லெண்ணத்தில றோட்டுக்கு மேல சாக்குப் படங்கில பந்தல் கட்டியிருக்கினம். அதால கொஞ்ச மெண்டாலும் வெயிலின்ர உக்கிரத்தை அதில நிக்கிறவை தவிர்க்கக்கூடியதா இருக்கும். அதில நிக்கேக்க காப்பெற் வெக்கை தாவினாலும் மேலால சூரியவெக்கை விழாது. நேற்றுமுழுக்க அதில நிண்ட சனமெல்லாம், ஆரும் சொல்லாமலே பிரதேசசபை இப்பிடியொரு நல்லவேலை செய்திருக்கே எண்டு மனம் நிறைஞ்சு பாராட்டிப் போட்டுத்தான் போனவை. அந்தச் சாக்குப் படங்கை பச்சைக்கலரில போட்டால் இன்னும் குளிர்மையா இருக்குமே எண்டும் சிலர் நல்ல ஐடியா குடுத்தவை. முல்லைக்குப் பாரி தேர் குடுத்தமாதிரி, வெக்கைக்கு நல்லூர் பிரதேசசபை நிழல் குடுத்திருக்கு. இப்பிடி மற்றச் சபையளும் சனங்கள் வெக்கையால அவிஞ்சு அவதிப்படாமல் இருக்க தங்களால முடிஞ்ச வேலையளைச் செய்யலாமே?

padsi@uthayan.com

- பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media


# கைவிடப்பட்ட கட்டடங்களுக்குள் தொடரும் சமூகச் சீர்கேடுகள்

## தடுக்குமாறு கோரிக்கை

**மன்னார், ஏப்.18**

**மன்னார் பிரதேசத்தில் பாவனையற்ற பொது மற்றும் தனியார் கட்டங்களில் சமூ கச்சீர்கேடுகள் தொடர்வதால் அவற்றைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற் கொள்ளுமாறு ஊராட்சி முற்றக் கலந்துரையாடலில் கோரிக்கை விடுக்கப்பட்டது.**

2025 ஆம் ஆண்டின் நான்காம் காலாண்டுக்கான ஊராட்சி முற் றக் கலந்துரையாடலில் இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டது. கலந்துரையாடலில் மன்னார் பிரதேசத்தின் தேவைகள் மற்றும் பிரச்சினைகள் ஆராயப்பட்டன. இதன்போது அரைகுறை வீட்டுத் திட்டம், முறையான வடிகால் அமைப்பு, காணி உள்ளிட்ட பல தரப்பட்ட பிரச்சினைகள் சுட்டிக்காட்டப்பட்டன. (க-60)



புங்குடுதீவு கண்ணகி அம்மன் ஆலயத்தின் ஆலயத் தின் வருடாந்தப் பெருந்திருவிழா கொடியேற்றத்துடன் நேற்று ஆரம்பமானது. (க-17)

# இலவச நீரிழிவு பரிசோதனை முகாம்!

யாழ்ப்பாணம், ஏப். 18

யாழ். நீரிழிவுக் கழகம் மற்றும் கிறீன்பீல்ட் சனசமூக நிலையம் ஆகியன இணைந்து நடத்தும் விசேட இலவச மருத்துவப் பரி சோதனை முகாம் எதிர்வரும் 22 ஆம் திகதி புதன்கிழமை காலை 9 மணி முதல் மதியம் ஒரு மணி வரை கிறீன்பீல்ட் கழக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த முகாமில் நீரிழிவுப் பரிசோதனை, இரத்த அழுத்தம், காது பரிசோதனை, உடல் திணிவுச் சுட்டி, கண் பரிசோதனை என்பன முன்னெடுக்கப்படுவதுடன் மருத் துவ ஆலோசனைகளும் வழங்கப்படும். அத்துடன் முகாமில் கலந்துகொள்ளும் அனைவருக்கும் இலவசமாக நீரிழிவுக் கைநூல் வழங்கி வைக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)



# நல்லூர்ப் பிரதேச சபைக்கு வீதி விளக்குகள் நன்கொடை

கொழும்பு, ஏப். 18

பிரதேச அபிவிருத்தியை முன்னெடுக்கும் செயற்றிட்டத்தின் கீழ் நல்லூர் பிரதேச சபையின் தவிசாளர் பத்மநாதன் மயூர னின் வேண்டுகோளுக்கமைவாக தினேஸ் பேக் ஹவுஸ் நிறுவனத்தினர் மின்வலுக்கூடிய 50 புதிய வீதி மின் விளக்கு களை நேற்று வியாழக்கிழமை நல்லூர்ப் பிரதேச சபைக்கு அன்பளிப்பாக வழங்கியுள்ளனர். சீனாவிலிருந்து நேரடியாக இறக்குமதி செய்யப்பட்ட வீதி மின் விளக்குகளைத் தினேஸ் பேக் ஹவுஸ் நிறுவனத்தினர் நல் லூர் பிரதேச சபையின் தவிசாளர் மயூரனிடம் நேரடியாக வழங்கினர். (ச-66)

# பெருந்திருவிழா

யாழ்ப்பாணம், ஏப். 18

சாவகச்சேரி - சங்கத்தானை இத்தியடி வீரகத்தி விநா யகர் கோவில் வருடாந்த பெருந்திருவிழா எதிர்வரும் 22 ஆம் திகதி புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்து தினங்கள் நடைபெ றும். எதிர்வரும் 30 ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன. (ச-9)

# புதுக்குடியிருப்பில் உரம் விநியோகம்

முல்லைத்தீவு, ஏப்.18

புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் சிறுபோக நெற்செய்கையை மேற்கொள்ளும் விவசாயிகளுக்கு உரம் விநியோகிக்கும் நடவடிக்கை நேற்றுமுன்தினம் முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று புதுக்குடியிருப்பு கமநல சேவை நிலைய அபிவி ருத்தி உத்தியோகத்தர் தெரிவித்துள்ளார்.

புதுக்குடியிருப்பில் 2026 ஆம் ஆண்டுக்குரிய சிறுபோக இலக்காக 2 ஆயிரம் ஏக்கர் நிர்ணயிக்கப்பட்டதன் அடிப்படையில், இம்முறை ஆயிரத்து 750 ஏக்கரில் சிறு போகம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. ஒரு ஏக்கருக்கு 50 கிலோ என்ற அடிப்படை யில் விவசாயிகளுக்கு உரம் வழங்கப்படுகின்றது என்றும் அவர் தெரிவித்துள் ளார். (க-19)



## மரண அறிவித்தல்

| தோற்றம் | மறைவு |
| --- | --- |
| 20 . 08 . 1943 | 17 . 04 . 2026 |



**நடராசா சறோஜினிதேவி**

புகையிரத நிலைய வீதி சாவகச்சேரியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா சறோஜினிதேவி நேற்று (17.04.2026) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் அமரர் அருணாச்சலம் நடராசா அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான கந்தையா - சின்னம்மா தம்பதியரின் மகளும், காலஞ்சென்றவர்களான அருணாசலம் - செல்லம்மா தம்பதியரின் மருமகளும், உதயகுமார் (அமரர்), விமலகுமார் (ஆசிரியர்- யா/மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி), ஆகியோரின் தாயாரும், ஜெயந்தினி (ஆசிரியை- யா/டிறிபேக் கல்லூரி) அவர்களின் மாமியாரும், பவிஷன் (மாணவன் -யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி), பவிஷ்ணவி (மாணவி - சாவகச்சேரி இந்துக் கல்லூரி) ஆகியோரின் பேர்த்தியும், பரமேஸ்வரி, சண்முகராசா, பாலசுப்பிரமணியம் (அமரர்), பரமேஸ்வரன் (கனடா), பாலேந்திரன் (கனடா), நகுலேஸ்வரி ஆகியோரின் சகோதரியும், செல்லத்துரை (அமரர்), தயாளம் (அமரர்), திருக்கேதீஸ்வரி (கனடா), ஸ்ரீகமலாசினிதேவி (கனடா), சௌந்தரராஜன் ஆகியோரின் மைத்துனியும், கஜன், சுரேன், திவ்யா, ஜனார்த்தனி ஆகியோரின் மாமியாரும், யசோதரன், சுகந்தினி, சுதாகரன், சுதர்சினி, சுரேந்திரன், மயூரதன் (அமரர்), கௌசல்யா, விகிந்தன், ஜெயதீபா ஆகியோரின் பெரியம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (19.04.2026) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று, முற்பகல் 10.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர் மற்றும் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**இல.13,**
**புகையிரத நிலைய வீதி,**
**சாவகச்சேரி.**

**தகவல்:**
**மகன் - விமலகுமார்.**
**T.P:077 226 9934**

ICS|A

Digitized by Noolaham Foundation
noolaham.org | noolaham.media

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை

## அவகாசம் - அவநம்பிக்கை..!

'இலங்கைக்குத் தொடர்ச்சியான ஆதரவை வழங்குவோம்' என்று நம்பிக்கை வழங்கியுள்ளார் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் வோல்கர் ட்ரக். ஐக்கிய நாடுகள் சபைக்கான இலங்கையின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதி சுமித் தஸாநாயக்கவை அண்மையில் சந்தித்துக் கலந்துரையாடியபோதே இந்த வாக்குறுதியை அவர் வழங்கியுள்ளார். அத்துடன், இலங்கையின் அண்மைக்காலச் செயற்பாடுகளையும் வோல்கர் ட்ரக் வெகுவாகவே பாராட்டியுள்ளார்.

இறுதிப்போரின்போதும் அதற்கு முன்னரும் இடம்பெற்ற போர்க் குற்றங்களுக்கு இலங்கை இதுவரைமுறையானவகையில்பொறுப்புக்கூறலை நிறைவேற்றவில்லை. ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் ஒவ்வொரு அமர்வுகளின் போதும், இலங்கைக்கு எதிராகக் கடுமையான நிலைப்பாடு காட்டப்படும் என்று கூறப்படுகின்ற போதிலும், இலங்கை மிகச் சாதுர்யமான முறையில் ஐக்கிய நாடுகள் பேரவையையும், சர்வதேசத்தையும், இணை அனுசரணை நாடுகளையும் ஏமாற்றியே வருகின்றது. இதற்கு, ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை வெளிப்படுத்தும் தளர்வுப் போக்கும், அதீத அவகாசங்களுமே காரணம். இவ்வாறானநிலையில்தான், வரலாற்றில் இதுவரை இல்லாத வகையில் இலங்கை மீது ஆகப்பெரும் தளர்வுப்போக்கை வெளிப்படுத்தி வருகின்றார் வோல்கர் ட்ரக்.

ஈழத்தமிழர்களுக்கான தீர்வு, இலங்கையின் பொறுப்புக்கூறல் உள்ளிட்ட விடயங்களில் ஜனாதிபதி அநுர தலைமையிலான ஸ்ரீலங்கா அரசாங்கம் இதுவரை எவ்வித காத்திரமான நகர்வையும் மேற்கொள்ளவில்லை என்பதே உண்மை. செம்மணி மனிதப் புதைகுழியை அகழ்வதும், அந்தப் புதை குழியைப் பார்வையிட சர்வதேசப் பார்வையாளர் களை அனுமதிப்பதும் ஒருபோதும் தீர்வை நோக்கிய பயணமாக அமையாது. இவை ஓர் அரசாங்கம் செய்யவேண்டிய அடிப்படை விடயங்கள். நிலைமை இவ்வாறிருக்கையில், இத்தகைய விடயங்களைக் காரணமாகக் கொண்டு இலங்கை அரசாங்கத்துக்கு வழங்கப்படும் சலுகைகளும் அவகாசங்களும் மிகவும் ஆபத்திலேயே முடியும். அத்துடன், ஐக்கிய நாடுகள் மனிதஉரிமைகள் பேரவை மீது ஈழத்தமிழர்கள் கொண்டுள்ள எதிர்பார்ப்பையும், நம்பிக்கையையும் நீர்த்துப் போகவும் செய்யும்.

சுதந்திர இலங்கையின் வரலாற்றில், இதுவரை ஆட்சியமைத்த அரசாங்கங்களுக்கு இல்லாத மகத்துவமான பெருமை ஜனாதிபதி அநுர தலைமையிலான திசைகாட்டி அரசாங்கத்துக்கு உள்ளது. இனம், மதம் என்ற வேறுபாடு இல்லாமல், அனைத்து இன மக்களும் ஓரணியில் நின்று இந்த அரசாங்கத்தைத் தோற்றுவித்தனர். குறிப்பாக ஈழத் தமிழர்களும், கணிசமான பிரதிநிதித்துவத்தை வழங்கியுள்ளனர். எனவே, தமிழர்களின் ஆதரவைப் பெற்று ஆட்சியமைத்த அரசாங்கம், தமிழர்களுக்கு விரைவாகத் தீர்வு வழங்க வேண்டும் என்று ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை வலியுறுத்த வேண்டுமே தவிர, சலுகைகள்-விடுக்கொடுப்புகள்-அவகாசங்கள் - தளர்வுகளை வழங்குவது ஏற்புடைத்து அல்ல. ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் வோல்கர் ட்ரக், பாதிக்கப்பட்ட மக்களின் பாற்பட்டுச்செயற்பட வேண்டும் என்பதே ஈழத்தமிழர்களின் எதிர்பார்ப்பு. ஆனால் அவரோ அதற்கு நேர்மாறாகவே நடக்கிறார் என்பதையே அவருடைய 'இலங்கை ஆதரவு'என்ற நிலைப்பாட்டு துலாம்பரமாகக் காட்டி நிற்கின்றது.

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com





### பொய்யாமொழி

**அல்லவை தேய அறம்பெருகும் நல்லவை நாடி இனிய சொலின**

**பொருள்:** பிறர்க்கு நன்மையானவற்றை நாடி இனிமை உடைய சொற்களைச் சொல்லின், பாவங்கள் தேய்ந்து குறைய அறம் வளர்ந்து பெருகும்.



## இலங்கையரின் கல்வித்தரம் பத்தாண்டுகளில் அதிகரிப்பு

**கொழும்பு, ஏப்.18**
**2024 ஆம் ஆண்டு மக்கள்தொகை மற்றும் வீட்டுவசதிக் கணக்கெடுப்பின்படி, இலங்கையில் கடந்த பத்து ஆண்டுகளில் கல்வித் தகைமை குறிப்பிடத்தக்க முன்னேற்றம் அடைந்துள்ளது.**

பிரதானமாக கலாநிதி பட்டம் பெற்றவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதுடன், மொத்த உயர்கல்வித் துறையிலும் சாதகமான மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன.

2012 ஆம் ஆண்டில் 6,557 ஆக காணப்பட்ட கலாநிதிப் பட்டதாரிகளின் எண்ணிக்கை, 2024ஆம் ஆண்டில் 11,757 ஆக உயர்ந்துள்ளது. இது மொத்த மக்கள் தொகையில் 0.1 வீதமாகும்.

பட்டம் பெற்றவர்களின் எண்ணிக்கை இரண்டு மடங்குக்கும் மேலாக அதிகரித்துள்ளது. 2012ஆம் ஆண்டு 358,052 (3.0 வீதம்) ஆக காணப்பட்ட இந்த எண்ணிக்கை, 2024ஆம் ஆண்டு 780,958 (5.6 வீதம்) ஆக அதிகரித்துள்ளது. மூன்றாம் நிலைக் கல்வியைப் பூர்த்தி செய்தவர்களின் எண்ணிக்கை 2,195,117 (18.2 வீதம்) இலிருந்து 3,635,462 (26.2 வீதம்) ஆக கணிசமான வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளது.

க.பொ.த உயர்தரம் அல்லது அதற்கு இணையான கல்வித் தகைமை கொண்டவர்களின் எண்ணிக்கை 1,724,574 (14.2 வீதம்) இலிருந்து 2,677,022 (19.4 வீதம்) ஆக அதிகரித்துள்ளது. இடைநிலைக் கல்வியைக் கொண்டவர்களின் எண்ணிக்கை 7,079,569 இலிருந்து 8,096,402 ஆக உயர்ந்துள்ளது. இது இரண்டு காலப்பகுதிகளிலும் மொத்த மக்கள் தொகையில் சுமார் 58 வீதமாகும். ஆரம்பக் கல்வியை மாத்திரம் கொண்டவர்களின் எண்ணிக்கை 2,214,792 (18.4 வீதம்) இலிருந்து 1,738,942 (12.5 வீதம்) ஆக வீழ்ச்சியடைந்துள்ளது. முறையான பாடசாலைக் கல்வியைப் பெறாதவர்களின் எண்ணிக்கை 561,163 (4.7 வீதம்) இலிருந்து 400,511 (2.9 வீதம்) ஆகக் குறைவடைந்துள்ளது என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)



## கொங்கஹகே, அபேசிங்கவுக்கு பிணை அனுமதி

கொழும்பு, ஏப்.18
இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் முன்னாள் தலைவர் சரத் கொங்கஹகே மற்றும் முன்னாள் பணிப்பாளர் நாயகம் தேவப்பிரிய அபேசிங்க ஆகியோருக்கு கொழும்பு நீதவான் நீதிமன்றம் பிணை அனுமதி வழங்கியுள்ளது. இவர்கள் இலஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக்குழுவால் கைது செய்யப்பட்டு நிலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த நிலையில், நேற்று நீதவான் நீதிமன்றம் பிணை அனுமதி வழங்கியுள்ளது. (எ-இ)



## ஆட்பதிவு திணைக்களத்தின் சேவைகள் நேற்று நிறுத்தம்!

கொழும்பு, ஏப்.18
ஆட்பதிவு திணைக்களத்தின் ஒரு நாள் சேவை மற்றும் அனைத்துப் பொதுச் சேவைகளும் நேற்று வெள்ளிக்கிழமை நிறுத்தப்பட்டிருந்தது. திணைக்களத்தின் கணினிக் கட்டமைப்பில் ஏற்பட்டுள்ள திடீர் கோளாறு காரணமாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று அமைச்சு தெரிவித்துள்ளது. ஆட்பதிவுத் திணைக்களத்தின் பிரதான அலுவலகம் மற்றும் அனைத்து மாகாண அலுவலகங்களிலும் முன்னெடுக்கப்படும் ஒரு நாள் சேவை உள்ளிட்ட அனைத்து பொதுச் சேவைகளும் நேற்று நடைபெறவில்லை. இன்று சேவைகள் வழமைபோன்று நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (எ-இ)

## பிரதேச சபைத் தலைவருக்கு மறியல் நீடிப்பு

கொழும்பு, ஏப்.18
ஊழல் குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள நுவரெலியா பிரதேச சபைத்தலைவரின் பிணைமனுவை கொழும்புநீதிவான் நீதிமன்றம் நிராகரித்துள்ளது. சந்தேக நபரை ஏப்ரல் 28ஆம் திகதி வரையில் மேலும் விளக்கமறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டார். நுவரெலிய பிரதேச சபையின் அதிகார வரம்புக்கு உட்பட்ட அரசுக்கு சொந்தமான நிலத்துக்கான அபிவிருத்தித் திட்டத்துக்கு ஒப்புதல் அளிப்பது தொடர்பில், நில உரிமையாளர் ஒருவருக்கு முறையற்ற வகையில் ஆதாயம் அளிக்கும் விதத்தில் செயல்பட்டதன் அடிப்படையிலேயே இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழுவால் சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டுள்ளார். (எ-இ)

ஞாயிற்றுக்கிழமை - சித்திரை 06
19.04.2026
சுபநேரம் : 09.02 – 10.32
ராகுகாலம் : 04.32 – 06.02

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# வெடுக்குநாறி மலையை பௌத்தமயமாக்க விடோம்

## இந்து சமயத் தொண்டர் சபை கண்டனம்

வவுனியா, ஏப்.18

வவுனியா வெடுக்குநாறி மலை தமிழர்களின் பாரம்பரிய வழிபாட்டுத்தலம். இதுவே வரலாற்று ரீதியான உண்மை. இதனை பௌத்தமயமாக்க ஒரு போதும் விடமாட்டோம் என்று இலங்கை இந்து சமயத் தொண்டர் சபை கண்டனம் வெளியிட்டுள்ளது.

வெடுக்குநாறி மலையில் காணப்படும் தடயங்கள் அனைத்தும் பௌத்தத்துக்குரியவை. விரைவில் இது வர்த்தமானிப் படுத்தப்படும் என்று பௌத்த சாசன அமைச்சர் சுனில் செனவி தெரிவித்த கருத்துக்கே, இந்து சமயத் தொண்டர் சபை கண்டனம் வெளியிட்டுள்ளது.

இலங்கை இந்து சமயத் தொண்டர் சபை விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

வெடுக்குநாறிமலை தமிழர்களின் பாரம்பரிய வழிபாட்டுத் தலமாக நீண்டகாலமாக இருந்து வருகின்றது. ஆதிலிங் கேஸ்வரர் ஆலயத்தில் நீண்ட காலமாகச் சைவசமயத்தவர்களால் வழிபாடு நடத்தப்பட்டு வருகின்றது. அந்தப் பகுதி மக்களின் வரலாறு, கலாசாரம் மற்றும் தொடர்ச்சியான ஆன்மிகச் செயல்பாடுகள் இவற்றை உறுதிப்படுத்துகின்றன. எந்தவிதப் பரந்த ஆய்வும் இல்லாமல் ஒருதலைப்பட்சமாக பௌத்த மதத்தினருக்குரியது என அறிவிப்பது ஏற்றுக்கொள்ள முடியாது. ஆட்சியாளர்கள் இனவாத, மதவாதப் போக்கைக் கடைப்பிடிக்கிறார்கள் என்பதற்கு இதைவிட ஆதாரம் தேவையில்லை. இது மிக மோசமான அதிகார துஷ்பிரயோகமாகும். இது இன முரண்பாடுகளைத் தோற்றுவிக்கும். இத்தகைய அறிவிப்புக்கள் வரலாற்று உண்மைகளை மறைக்கும் முயற்சியாகும். தமிழ் மக்களது மத மற்றும் கலாசார உரிமைகளை மீறும் செயலாகும். சமூக நல்லிணக்கத்தைப் பாதிக்கும் அபாயத்தை ஏற்படுத்தும். பல இன, மத மக்கள் இணைந்து வாழும் நாட்டில் பொறுப்பான பதவியிலுள்ளவர்கள் சம நிலையுடனும், நியாயத்துடனும் கருத்துக்களை வெளியிட வேண்டும். எந்தவொரு சமூகத்தினரையும் அல்லது மதத்தினரின் உரிமைகளையும் புறக்கணிக்கும் நடவடிக்கைகள் எதிர்காலத்தில் பெரும் பாதிப்புக்களை உருவாக்கக் கூடும். வெடுக்குநாறி மலை தொடர்பாக சுயாதீன மற்றும் உண்மையான, விஞ்ஞான ரீதியான ஆய்வு நடத்தப்பட வேண்டும். மக்களின் வரலாற்று மற்றும் வழிபாட்டு உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும். இவ்விடயத்தில் நீதியும், சமத்துவமும் நிலைநிறுத்தப்பட வேண்டுமென்றுள்ளது. (க-66)



# சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்தது ஆவரங்கால் இந்து இளைஞர் அணி

யாழ்ப்பாணம், ஏப்.18

கெருடாவில் இளந்துளிர் அமையமும், இளந்துளிர் இளைஞர் கழகமும் இணைந்து நடத்திய யாழ்.மாவட்ட அணிகளுக்கு இடையிலான கரப்பந்தாட்டத் தொடரில் ஆவரங்கால் இந்து இளைஞர் அணி சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்தது. கரப்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டம் கடந்த திங்கட்கிழமை கழக மைதானத்தில் மின்னொளியில் நடைபெற்றது.

இறுதியாட்டத்தில் ஆவரங்கால் இந்து இளைஞர் அணியும் புத்தூர் வளர்மதி அணியும் மோதின. 5 சுற்றுக்கள் கொண்ட போட்டியில், முதலாவது சுற்றில் புத்தூர் வளர்மதி அணி வெற்றி பெற்றது. ஆவரங்கால் இந்து இளைஞர் அணி அடுத்த இரண்டு சுற்றுக்களிலும் வெற்றி பெற்றது. நான்காவது சுற்றை புத்தூர் வளர்மதி அணி அபாரமாக விளையாடி அசத்தியது.

வெற்றி தோல்வியைத் தீர்மானிக்கும் 5 ஆவது சுற்று இரு அணிகளுக்கும் பெரும் சவாலாக மாறியது. தொடர் ஆட்டத்தில் ஆவரங்கால் இந்து இளைஞர் அணி 15:13 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில், வெற்றி பெற்று சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்தது. (க422)

# கருகம்பனையில் மருத்துவ முகாம்

யாழ்ப்பாணம், ஏப்.18

கருகம்பனை பொது அமைப்புகள், யாழ்ப்பாண மருத்துவர்கள் சங்கம் மற்றும் யாழ். மாவட்ட மருத்துவப் பிரதிநிதிகள் சங்கம் ஆகியன இணைந்து நடத்தும் இலவச மருத்துவ முகாம், எதிர்வரும் 25 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணி முதல் நண்பகல் 1 மணி வரை கருகம்பனை கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த மருத்துவ முகாமில் குருதிப்பரிசோதனை, இரத்த அழுத்தம், உடற் திணிவுச் சுட்டி போன்ற பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு, அதற்கான மருத்துவ ஆலோசனைகளும் வழங்கப்படும். பொது மருத்துவ நிபுணர்கள், குழந்தை மருத்துவ நிபுணர்கள், சத்திரசிகிச்சை நிபுணர்கள், மகப்பேறு மற்றும் பெண் நோயியல் நிபுணர், தோல் மருத்துவ நிபுணர் ஆகியோர் இதில் பங்கேற்பர். இவர்களிடம் பொருத்தமான மருத்துவ ஆலோசனை மற்றும் மருந்துகளைப் பெற்றுக் கொள்ள முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (க-100)

# 300 அடி பள்ளத்தில் பாய்ந்து கார் விபத்து

## ஒருவர் பலி!



ஹற்றன் பொகவந்தலாவை பிரதான வீதியில் சென்றுகொண்டிருந்த கார் ஒன்று வீதியை விட்டு விலகி சுமார் 300 அடி பள்ளத்தில் பாய்ந்து விபத்துக்குள்ளானதில் ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று பொகவந்தலாவ பொலிஸார் தெரிவித்துள்ளனர். இந்த விபத்து நேற்று வெள்ளிக்கிழமை காலை இடம்பெற்றுள்ளது.

விபத்தில் காயங்களுக்குள்ளான மூன்று பேர் பொகவந்தலாவை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்றும் உயிரிழந்த ஆணின் சடலம் மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ச-இ)

# வாவியில் நீராடிய இருவர் உயிரிழப்பு

கொழும்பு, ஏப். 18

எம்பிலிப்பிட்டிய - குட்டிகல பகுதியில் உள்ள கச்சிகல வாவியில் நீராடச் சென்ற இருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர். இந்தச் சம்பவத்தில் 60 மற்றும் 78 வயதுடைய இரு ஆண்களே உயிரிழந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. சம்பவம் தொடர்பில் குட்டிகல பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச-இ)

# இன்றைய ராசி உங்களுக்கு எப்படி?

**மேடம்:** தொடங்கும் காரியங்கள் சாதகமாக முடியும். சிலருக்கு திடீர் செலவுகளால் கையிருப்பு குறையும். குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவுகள் எதையும் இன்றைக்கு எடுக்கவேண்டாம். நண்பர்களின் சந்திப்பு மகிழ்ச்சி தருவதாக இருக்கும்.

**இடபம்:** எந்த முடிவையும் ஒருமுறைக்குப் பலமுறை யோசித்து எடுப்பது நல்லது. குடும்பத்தில் மற்றவர்களுடன் அனுசரித்துச் செல்லவும். கணவன்– மனைவிக்கிடையே சிறு பிரச்சினை ஏற்படக் கூடும் என்பதால் பொறுமை அவசியம்.

**மிதுனம்:** குடும்பத்தில் உள்ளவர்களின் தேவைகளை நிறைவேற்ற செலவு செய்ய நேரிடும் என்பதால், கையிருப்பு கரையும். வாழ்க்கைத்துணை உங்கள் பொறுப்புகளைப் பகிர்ந்துகொள்வது ஆறுதலாக இருக்கும்.

**கடகம்:** தொட்ட காரியங்கள் வெற்றிகரமாக முடியும். குடும்பத்தினர் உங்கள் ஆலோசனையை ஏற்றுக்கொள்வார்கள். வாழ்க்கைத் துணைவழி உறவுகளால் எதிர்பாராத ஆதாயம் ஏற்படக் கூடும்.

**சிம்மம்:** உற்சாகமான நாள். சகோதரர்கள் வகையில் அலைச்சலுடன் ஆதாயமும் இருக்கும். அவசர முடிவுகளைத் தவிர்க்கவும். பிள்ளைகளின் விருப்பத்தைப் பூர்த்தி செய்வீர்கள். சிலருக்கு திடீர்ப் பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு.

**கன்னி:** எதிலும் அவசரமில்லாமல் செயல்பட வேண்டிய நாள். உறவினர்களுடன் வீண் மனஸ்தாபம் ஏற்படக்கூடும் என்பதால் பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**துலாம்:** மனதில் இனம் தெரியாத குழப்பம் ஏற்படக்கூடும். அன்றாடப் பணிகளிலும் கூடுதல் கவனம் தேவை. தாய்வழி உறவுகளுக்காக செலவு செய்யவேண்டி இருக்கும்.

**விருச்சிகம்:** புதிய ஆடை, ஆபரணங்களை வாங்கும் யோகம் உண்டாகும். உறவினர்கள் வருகையால் வீட்டில் கலகலப்பான சூழ்நிலை ஏற்படும். புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். வாழ்க்கைத்துணையால் மகிழ்ச்சி உண்டாகும்.

**தனுசு:** புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். சகோதர வகையில் எதிர்பாராத ஆதாயம் ஏற்படக்கூடும். தந்தை வழி உறவினர்களால் அனுகூலம் உண்டாகும்.

**மகரம்:** உறவினர்கள் வருகையால் சில சங்கடங்கள் ஏற்படக்கூடும். பொறுமையைக் கடைப்பிடிக்கவும். வியாபாரத்தில் பணியாளர்களால் பிரச்சினை ஏற்படக்கூடும்..

**கும்பம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். உடல் நலனில் கவனம் தேவை. உறவினர்கள் உதவி கேட்டு வருவார்கள்.

**மீனம்:** காரியங்கள் அனுகூலமாக முடியும். ஆனால், புதிய முயற்சிகளில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும். வாழ்க்கைத்துணை வழியில் செலவுகள் ஏற்படக்கூடும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | noolaham.media

## எரிபொருள், மின்சார

# நெருக்கடியைச் சமாளிக்க ரூ.100 பில்லியன் ஒதுக்கீடு!



### அமைச்சர் நளிந்த தெரிவிப்பு

**கொழும்பு, ஏப். 18**

**மத்திய கிழக்குப் போர்ச் சூழலால் ஏற்படக்கூடிய எரிபொருள் விலை உயர்வு மற்றும் மின்சார நெருக்கடிகளில் இருந்து மக்களைப் பாதுகாப்பதற்காக அரசாங்கம் 100 பில்லியன் ரூபா விசேட நிதியொதுக் கீட்டைச் செய்துள்ளதாக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் ஊடகங்களுக்குத் தெரிவித்ததாவது:-

உலகச் சந்தையில் எரிபொருள் விலை அதிகரித்தாலும் அதன் முழுமையான பாரத்தை மக்கள் மீது சுமத்தாமல் திறைசேரி ஊடாக நிரவகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஒதுக்கப்பட்ட 100 பில்லியன் ரூபா மின்சாரம், எரிபொருள் விநியோகம் மற்றும் மக்களுக்கான நலன்புரிக் கொடுப்பனவுகளை அதிகரிப்பதற்காகப் பயன்படுத்தப்படும். உலகச் சந்தையில் மசகு எண்ணெய் விலைகள் வேகமாக மாறினாலும், அதன் ஒரு பகுதியை அரசாங்கத் திறைசேரியும் எரிபொருள் நிறுவனங்களும் ஏற்றுக்கொள்வதால் உள்நாட்டில் தாக்கங்கள் தவிர்க்கப்படும். உலகின் பல நாடுகளில் எரிபொருள் வரிசைகள் காணப்படும் சூழலில், இலங்கையில் தடையற்ற விநியோகத்தை உறுதி செய்ய அரசாங்கம் முன்னுரிமை அளித்து வருகிறது என்றார். (ச-இ)

---


## பெயர்மாற்றம்

மீசாலை வடக்கு, கொடிகாமத்தில் வசிக்கும் **செல்லத்துரை இராசேந்திரம்** ஆகிய நான் எனது பெயரை **செல்லத்துரை இராஜேந்திரன்** என மாற்றம் செய்கின்றேன் என்பதை இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு மக்களுக்கு அறியத்தருகின்றேன்.

செல்லத்துரை இராஜேந்திரன்

(CR/47415) N-1

---

## இரணைமடு திருவருள்மிகு கனகாம்பிகை அம்பாள் பெருங்கோயில் கிளிநொச்சி.



**2026 ஆம் ஆண்டிற்கான பெருந்திருவிழா ஆரம்பமாகவுள்ளதால் திருவிழா கால கடை ஏலம் நடைபெறவுள்ளது. எனவே திருவிழா காலத்தில் கடைகள் நடாத்த விரும்புபவர்கள் நேரடியாக கலந்து கொள்ளவும்.**

**காலம் - 19.04.2026 (ஞாயிற்றுக்கிழமை)**

**நேரம் - காலை 9.00 மணி**

**இடம் - ஆலயமுன்றல்**

(CR/47410) J-1

---

## வவுனியா மாவட்ட சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்

### பதவி வெற்றிடம் வெளிவாரி நியமனம்

வவுனியா மாவட்ட சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் கீழ் குறிப்பிடப்படும் பதவிக்கு தகமையுள்ள விண்ணப்பதாரிகளிடம் இருந்து வெளிவாரியாக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. (ஆண் பெண் இருபாலாரும்)

01. பதவி / சம்பளஅளவுத்திட்டம் (சுற்றுநிருபம் 02/2025 (1) இன் படி) : அலுவலக உதவியாளர் 317/15
32,435-460x10-520x10-680x10-49,035
வெற்றிடம் - 01
(கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு சுற்று நிருபங்களுக்கு அமைவாக ஏனைய கொடுப்பனவுகளும் வழங்கப்படும்)

02. தகமைகள் (சுற்றுநிருபம் 01/2021)
அ. கூட்டுறவு ஊழியர் 16 வது சம்பளத்திட்ட பதவியில் ஆகக்குறைந்தது 02ஆண்டு கால அனுபவம் /
கூட்டுறவு ஊழியர் 17 வது சம்பளத் திட்ட பதவியில் ஆகக் குறைந்தது 01 ஆண்டு கால அனுபவம்
அல்லது
ஆ. கூட்டுறவு ஊழியர் கனிஷ்ட தராதரப்பத்திரம் /08 ஆம் தர கல்விச் சான்றிதழ்

03. வயதெல்லை : 18-45 ற்கு உட்பட்டிருத்தல்
04. விண்ணப்ப முடிவு திகதி : 08.05.2026
05. குறிப்பு

◆ கூட்டுறவு சங்கங்களின் நிரந்தர பணியாளர்களாயின் உரிய சங்கத்தின் தலைவர் ஊடாக விண்ணப்பிக்கவேண்டும். (கூட்டுறவு பணியாளர்களாயின் வயதெல்லை ஏற்புடையதல்ல)

◆ விண்ணப்பிக்கும் பதவி. முழுப்பெயர். நிரந்தரமுகவரி. தற்போதைய வசிப்பிட முகவரி. அடையாள அட்டை இலக்கம். பிறந்த திகதி. வயது. பால். கல்வித்தகைமை. தொழிற் கல்வித்தகைமை. சேவைத்தகைமை. ஆகிய சுயவிபரங்கள் அடங்கிய விண்ணப்பப்படிவத்தினை தாங்களே தயாரித்து. கடித உறையின் இடதுபக்கமேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியினை குறிப்பிட்டு "தலைவர். வவுனியா மாவட்ட சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம். இல.44. குட்செட் வீதி. வவுனியா" எறை முகவரிக்கு பதிவு தபால் மூலம் அனுப்புதல். வேண்டும்.

திரு. சு.புவனேந்திரராசா. JP
தலைவர்,
வவுனியா மாவட்ட சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்,
இல.44, குட்செட் வீதி, வவுனியா.

T.P NO: 024 - 222 2636
024 - 222 2341

திகதி
2026.04.18

(N-1)

---

## வேலைவாய்ப்பு

யாழில் இயங்கிவரும் பசரக்கு கடை மற்றும் சுப்பர் மார்க்கட்கு கீழ் காணும் ஆட்கள் தேவை

1. Computer Billing & Cashier
2. Sales Assistants (Boy & Girl)
3. Packing (பொதியிடல்)
4. Delivery Boy
5. Driver
7. Part Time (5.00 pm to 10.00)

யாழ் மாநகர சபைக்கு உட்பட்டவர்கள் விரும்பத்தக்கது.

**தொடர்புக்கு: 077 4195 209**
**077 4195 218**

(CS 31612) A

---

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
28 . 05 . 1932



மறைவு
08 . 05 . 2024

**சிவலிங்கம் தேவகுஞ்சரம்**

திதி- சித்திரை பூர்வபக்க பிரதமை (18.04.2026)

கண் முன்னே வாழ்ந்த காலம் கனவாகிப் போனாலும்
எங்கள் முன்னே உங்கள் முகம் எந்நாளும் உயிர் வாழும்
மண் விட்டு மறைந்து நீங்கள் விண் நோக்கிச் சென்று
ஓராண்டு சென்றாலும் கண் விட்டு மறையாது
உங்கள் நினைவுகள்

கதிரிப்பாய், அச்சுவேலி. (CS/61220) J-1 குடும்பத்தினர்

---

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

**சரவணமுத்து மகேந்திரன்**

(ஓய்வுபெற்ற அதிபர்)

மறைவு - 18.04.2023



கண் முன்னே வாழ்ந்த காலம்
கனவாகிப் போனாலும்
எங்கள் முன்னே உங்கள் முகம்
எந்நாளும் உயிர் வாழும்
மண் விட்டு மறைந்து
நீங்கள் விண் நோக்கிச் சென்று
மூன்றாண்டுகள் சென்றாலும்
கண் விட்டு மறையாது
உங்கள் நினைவுகள்


ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!

கைதடி நுணாவில்,
சாவகச்சேரி.

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.media

# அட்சய திருதியையின் சிறப்புகளும் விரதம் இருக்கும் முறைகளும்...!



சித்திரை மாதம் வளர்பிறையில் வரும் திருதியை "அட்சய திருதியை" என்று அழைக்கப்படுகிறது. அட்சயம் என்றால் வளர்வது, பெருகுவது என்று அர்த்தம். அப்படியாக அட்சய திருதியை அன்று, நாம் என்ன பொருள் வாங்கினாலும் அந்தப் பொருள் மிகவும் பெருகி வளம் சேர்க்கும். குறைவில்லாத செல்வத்தை அள்ளித் தரும் திருநாளாக அட்சய திருதியை போற்றப்படுகிறது.

### சிறப்புகள்

தர்மர் சூரிய பகவானை வேண்டி மணி மேகலை அட்சய பாத்திரம் பெற்றதும், சிவபெருமான் அன்னபூரணித் தாயாரிடம் தனது பிச்சைப் பாத்திரம் நிரம்பும் அளவு உணவைப் பெற்றதும் இந்தநாளில் தான். பகவான் பரசுராமர் அவதரித்த நாள், புனித நதி கங்கை பூமியைத் தொட்ட நாள், குசேலர் கிருஷ்ண பகவானைச் சந்தித்த நாள், ஆதி சங்கரர் செல்வத்தைக் கொட்டிக் கொடுக்கும் ஸ்லோகமாகிய கனகதாரா ஸ்தோத்திரத்தை இயற்றிய நாள், குபேரன் இழந்த செல்வங்களை மீட்ட நாள், திரேதா யுகம் ஆரம்பமான நாள், வியாசர் மஹா பாரதம் எழுத ஆரம்பித்த நாளும் இதுவே.

இந்தநாளில் தங்கம் மட்டும் வாங்காமல் உப்பு, அரிசி, ஆடைகள் மற்றும் விலை உயர்ந்த எந்த ஒரு பொருளை வாங்கினாலும் அது பலமடங்கு பெருகும் என்பது ஐதீகம். அன்றைய தினத்தில் புதிய தொழில் தொடங்கலாம். பூமி பூஜை செய்வதற்கு உகந்த நாள். ஏழைகளுக்கு தானம் செய்யலாம். பிதுர்க்களுக்கு தர்ப்பணம் செய்யலாம். அப்படிச் செய்வதன் மூலம் அவர்களது ஆசீர்வாதம் பெற்றுச் சிறப்பாக வாழலாம்.

### விரதம் இருக்கும் முறை:

அட்சய திருதியை நாளன்று விடியும் முன் எழுந்து சுத்தமாக நீராடி, பூஜை அறையை சுத்தம் செய்து விளக்கேற்றி கோலம் போட்டு அதன் மீது ஒரு பலகையை வைக்கவும். பின் பலகையின் மீது கோலம் போட்டு ஒரு சொம்பில் சந்தன குங்குமம் இட்டு அதில் நீரை நிரப்பி அதன் மீது பெரிய தேங்காயை வைத்து மாவிலைகளை அதனைச் சுற்றி அடுக்கி கலசம் போல் தயார் செய்ய வேண்டும். பின் அந்தக் கலசத்தின் அருகில் மஞ்சள் பிள்ளையார் பிடித்து வைத்து, அதன் அருகில் புதிதாக வாங்கிய பொன், பொருள்களை வைத்து, பூ போட்டு பூஜை செய்ய வேண்டும். பிறகு அதற்கு கற்பூர தீபாராதனை காட்டி வணங்கினால் வளமான செல்வம் பெருகும்.

அந்த நாளில் ஏழைகளுக்கு அன்னதானம் செய்யலாம். உணவு, வஸ்திரம் போன்றவற்றைத் தானமாக வழங்கலாம். பசுவுக்கு கீரை வகைகளை வழங்கலாம். இந்நாளில் அன்னதானம் செய்வது மிகப் பெரிய புண்ணியமாக கருதப்படுகிறது.

இந்த அட்சய திருதியைத் தினத்தன்று வெண்மை நிறப் பொருட்கள் விசேஷமானது ஆகும். வெண்ணிற மல்லிப் பூ, வெண்பட்டு ஆடை, வெண்ணிற பால் பாயாசம் இவைகளைப் பயன்படுத்துதல் சிறப்பாகும். அட்சய திருதியை நாளில் தங்கம்தான் வாங்க வேண்டும் என்று நினைக்க வேண்டாம். வசதி உள்ளவர்கள் வாங்கலாம். வசதி இல்லாதவர்கள் உப்பு, மஞ்சள், நெல், அரிசி ஆகியவற்றை வாங்கி லட்சுமி படத்துக்கு முன் வைத்து வழிபடலாம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# அட்சய திருதியையில் கடைப்பிடிக்க வேண்டியவை



அட்சய திருதியை என்பது இந்து மதத்தில் மிகவும் புனிதமான நாளாகக் கருதப்படுகிறது. 'அட்சயம்' என்றால் 'குறையாதது' அல்லது 'அழியாதது' என்று பொருள். இந்த நன்னாளில் நாம் செய்யும் நற்செயல்கள் மற்றும் வழிபாடுகள் பலமடங்கு பெருகி நம் வாழ்வில் செல்வத்தையும் மகிழ்ச்சியையும் தரும் என்பது ஐதீகம். விஷ்ணு மற்றும் மகாலட்சுமிக்கு மிகவும் உகந்த இந்த நாளில், நாம் எவற்றைச் செய்ய வேண்டும், எவற்றைத் தவிர்க்க வேண்டும் என்பதை அறிவது அவசியமாகும்.

**உணவுக் கட்டுப்பாடுகளும் தவிர்ப்புகளும்**
அட்சய திருதியை அன்று இறைவழிபாட்டிற்கு முக்கியத்துவம் அளிக்கப்படுவதால், உணவில் சில கட்டுப்பாடுகளைப் பின்பற்றுவது அவசியம்.
அசைவம் மற்றும் மது: இது தெய்வங்களுக்கு உகந்த நாள் என்பதால், தவறுதலாகக் கூட அசைவ உணவுகளை உண்ணக்கூடாது.

**வீட்டைத் தூய்மையாக வைத்திருத்தல்**
மகாலட்சுமி தூய்மையான இடங்களில் மட்டுமே வாசம் செய்வார் என்பது நம்பிக்கை. எனவே:அட்சய திருதியை அன்று வீட்டை ஒட்டடை இன்றி, குப்பைகளின்றி மிகத் தூய்மையாக வைத்திருக்க வேண்டும். அசுத்தமான வீட்டிற்குள் மகாலட்சுமி நுழைய மாட்டார் என்பதால் வீட்டை நறுமணத்துடனும் சுத்தமாகவும் வைத்திருப்பது அவசியம்.

**துளசி பறித்தல்:** விஷ்ணுவின் பிரியமான இந்த நாளில், அவரது அம்சமாகக் கருதப்படும் துளசி இலைகளைச் செடியில் இருந்து பறிக்கக் கூடாது. இது லட்சுமி தேவியின் அதிருப்திக்குக் காரணமாகலாம். வெளிப்புறத் தூய்மையைப் போலவே அகத்தூய்மையும் இந்த நாளில் மிக முக்கியம். யாரிடமும் கோபம் கொள்வதோ, பொறாமைப்படுவதோ, வெறுப்பைக்காட்டுவதோ கூடாது. அதிகாலையில் நீராடி, உடல் மற்றும் மனதைத் தூய்மையாக வைத்துக்கொண்டு, மிகுந்த பக்தியுடன் மகாலட்சுமிக்கும் விஷ்ணுவுக்கும் பூஜைகள் செய்ய வேண்டும்.



**தங்கம் வாங்கும் போது கவனிக்க வேண்டியவை**
அட்சய திருதியை என்றாலே தங்கம் வாங்குவது ஒரு மரபாகிவிட்டது. ஆனால் தங்கம் வாங்கியவுடன் செய்ய வேண்டிய சில விதிகள் உள்ளன.

தங்கம் வாங்கியவுடன் பலரும் ஆசையினால் உடனே அணிந்து கொள்வார்கள். ஆனால், அவ்வாறு செய்வது தவறு.
ஆசி பெறுதல்: வாங்கிய தங்கத்தை இறைவனின் பாதத்தில் வைத்துப் பூஜித்து, பின் பெரியவர்களின் கைகளால் ஆசி பெற்று வாங்கிய பிறகே அணிய வேண்டும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# அட்சய திருதியை பற்றிய புராணத் தகவல்கள்



**குபேரன் நிதியைப் பெற்ற நாள்:** செல்வத்துக்கு அதிபதியான குபேரன், மகாலட்சுமியை வழிபட்டு, அட்சய திருதியை நாளன்று செல்வச் செழிப்புக்கான நிதியைப் பெற்றார்.

**பரசுராமர் அவதாரம் :** மகாவிஷ்ணுவின் ஆறாவது அவதாரமான பரசுராமர், இந்த பூமியில் அவதரித்தது அட்சய திருதியை தினமாகும். இது 'பரசுராம ஜெயந்தி' என்றும் கொண்டாடப்படுகிறது.

**அட்சய பாத்திரம் பெற்ற தருணம் :** வனவாசத்தின் போது, பாண்டவர்கள் பசி தீர, சூரியனிடமிருந்து 'அட்சய பாத்திரம்' (உணவு குறையாத பாத்திரம்) பெற்ற நாள் இது.

**கிருஷ்ணர் குசேலர் நட்பு :** குசேலர் தனது வறுமை நீங்க கிருஷ்ணரைச் சந்தித்து, அட்சய திருதியை நன்னாளில் பாக்கியம் பெற்றார்.

**திரௌபதியின் மானம் காத்தல் :** பாஞ்சாலி சபையில் திரௌபதியின் மானம் காக்க, கண்ணன் அட்சய பாத்திரத்தின் மூலம் ஆடையை (சேலை) வளரச் செய்தது இந்நாளில் தான்.

**அன்னபூரணி அவதாரம் :** பார்வதி தேவி, அன்னபூரணியாக அவதரித்து, சிவபெருமானின் பசிப்பிணி தீர்த்து, உலகிற்கு உணவளிக்கும் பொறுப்பை ஏற்ற நாள்.


வாடிக்கையாளர் அனைவருக்கும்
அட்சய திருதியை திருநாள் வாழ்த்துக்கள்


செல்வி நகை அகம்
தங்கப்பவுண் நகை வியாபாரம்
Manufacturers of Gold Jewels
22 கரட் தங்க நகைகள்
ஓடருக்கு உத்தரவாதத்துடன்
செய்துகொடுக்கப்படும்.
CHELVI
Nakai Agam
205/1, K.K.S. வீதி, குளப்பிட்டி,
யாழ்ப்பாணம்.
T.P.: 021 222 9441





அனைவருக்கும் இனிய
அட்சய திருதியை திருநாள் வாழ்த்துக்கள்

பூரணி
நகை மாடம்
22 கரட் தங்க நகைகள்
ஓடருக்கு உத்தரவாதத்துடன்
செய்து கொடுக்கப்படும்.
Tel : 077 133 2206
021 222 3121
இல. 46, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.


இந்த மங்கலகரமான நாளில், உங்கள் வாழ்வில்
செல்வம், மகிழ்ச்சி மற்றும் அமைதி குறையாமல் பெருக வாழ்த்துகிறோம்.

எமது அன்பான வாடிக்கையாளர்களே!
பொன் பெருகும் பொன்னாளில்
ஐஸ்வர்யம் பெருகி - உங்கள்
வாழ்வில் மகிழ்ச்சி பொங்க
உங்களை அன்போடு அழைக்கிறது!
அட்சய திருதியை முன்னிட்டு
சிறப்புப்பரிசில்கள் வழங்கப்படும்.








ஸ்தாபகர்

மைதிலி நகை மாடம்
(தனியார்) நிறுவனம்
89V, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
89V, Kasthuriyar Road,
Jaffna.
021 222 7902

யாழ் மைதிலி
ஜுவல்லர்ஸ்
79Z, செட்டியார் தெரு, கொழும்பு - 11
011 2396239










E-mail : maithilynagaimaadam89@gmail.com
Maithily Nagai Maadam


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அட்சய திருதியை ஆன்மீக நெறிமுறைகள்



'அட்சயம்' என்றால் குறைவில்லாது வளர்வது என்று பொருள். அட்சய திருதியை என்றால் பூரணமான அருளையும் செல்வத்தையும் அருளும் நாள் என்பது பொருள். இந்த நாளில் நாம் கட்டாயம் செய்ய வேண்டியவை மற்றும் செய்யக்கூடாதவை குறித்து அறிந்துகொள்வோம்.

அட்சய திருதியை மிகவும் புனிதமான நாள். எனவே முதலில் பித்ரு வழிபாடு கட்டாயம் செய்ய வேண்டும்.

பித்ரு வழிபாடு செய்தபிறகுதான் பிற சாமிகளைக் கும்பிட வேண்டும். வீட்டில் விளக்கேற்றி சுவாமியை வணங்கிவிட்டுப் பிற வேலைகளைத் தொடங்க வேண்டும். புதிய திரி இட்டு நல்லெண்ணை அல்லது நெய் இட்டு விளக்கேற்றுவது நல்லது. சுவாமிக்கும் நிவேதனமாகப் பால், கற்கண்டுச் சாதம், வெண்பொங்கல் ஆகியன படைப்பது மிகவும் விசேஷம்.

இந்த நாளில் முக்கியமான பணிகளைத் தொடங்கினால் அது விரைவில் சாதகமாக முடியும் என்பது நம்பிக்கை. எனவே புதிதாகத் தொழில் அல்லது கல்வி தொடங்க விரும்புபவர்கள் நாளை நிச்சயம் தொடங்கலாம். பன்மடங்கு உயர்வு கிடைக்கும்.

தானங்கள் செய்ய உகந்த நாள் அட்சய திருதியை. இந்த நாளில் அன்னதானம் செய்தால் நம் பரம்பரையில் மூன்று தலைமுறைகளுக்கு உணவுப் பஞ்சமே ஏற்படாது. குறிப்பாக தயிர்சாதம் தானமாக வழங்குவது மிகவும் சிறப்பு. ஆடை தானம் செய்வது மிகவும் சிறப்பு.

தங்கம் வாங்குவது ஒரு சேமிப்பாக இருக்கும் என்பதால் தங்கம் வாங்குதல் மிகச் சிறப்பு.. குறிப்பாகத் திருமணத்துக்கு நகைகள் எடுக்க வேண்டியிருந்தால் அதற்கு இந்த நாள் மிகவும் உகந்தது. தங்கம் வாங்குவதை விட வெள்ளி வாங்குவது மென்மேலும் செல்வம் சேர வழி செய்யும்.

இன்றைய நாளில் கடன் கொடுப்பதைத் தவிர்ப்பது நல்லது. கடன் வாங்காமல் இருப்பதும் சிறப்பு.












Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிலக்கரி இறக்குமதியை ஆராய ஆணைக்குழு

## ஜனாதிபதியால் நியமனம்

**கொழும்பு, ஏப்.18**

**நிலக்கரி இறக்குமதிகள் தொடர்பாக ஆராய்வதற்கு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவால் ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.**

இலங்கையில் நிலக்கரி மூலமான மின் உற்பத்தி ஆரம்பிக்கப்பட்ட காலம் முதல் 2026 ஏப்ரல் 16 ஆம் திகதியுடன் முடிவடைந்த காலப்பகுதிக்குள், அரசாங்கத்துக்குச் சொந்தமான லங்கா நிலக்கரி தனியார் நிறுவனம் அல்லது அதன் வழிவந்தவர்களால் இலங்கைக்கு நிலக்கரி இறக்குமதி செய்யப்பட்டமையிலும் மின் உற்பத்தியின் போதும் முறைகேடுகள் அல்லது சட்டவிரோதச் செயல்கள் இடம்பெற்றுள்ளனவா என்பது தொடர்பில் இந்த ஆணைக்குழு ஆராயவுள்ளது.

1978 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க விசேட ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுக்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தால் திருத்தப்பட்ட, 1978 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க விசேட ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுக்கள் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய இந்த ஆணைக்குழு நியமிக்கப்பட்டுள்ளது. இந்த ஆணைக்குழுவின் தலைவராக உயர்நீதிமன்ற நீதியரசர் கிகான் குலதுங்க நியமிக்கப்பட்டுள்ளார். அதன் உறுப்பினர்களாக மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர் ஆதித்ய பட்டபெந்திகே மற்றும் மேல் நீதிமன்ற நீதியரசர் சஞ்சீவ சோமரத்ன ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர். ஆணைக்குழுவின் செயலாளராக முன்னாள் இராஜாங்க அமைச்சின் செயலாளர் பி.வி. பந்துலசேன நியமிக்கப்பட்டுள்ளார். (எ-இ)



# ஒப்பந்தம் ஏற்பட்டால் பாகிஸ்தான் செல்வேன்

## ட்ரம்ப் தெரிவிப்பு

நியூயோர்க், ஏப்.18

ஈரான் உடனான அமைதிப் பேச்சுவார்த்தை ஒப்பந்தம் இறுதி செய்யப்பட்டால், பாகிஸ்தானுக்குச் செல்வேன் என்று அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார். வெள்ளை மாளிகையில் செய்தியாளர்களைச் சந்தித்த அவர், ஈரானுடனான பேச்சுவார்த்தைகள் தற்போது நேர்மறையான திசையில் நகர்கின்றது என்று தெரிவித்துள்ளார்.

கடந்த பெப்ரவரி மாதம் அமெரிக்கா, இஸ்ரேல் மற்றும் ஈரான் இடையே ஏற்பட்ட மோதல்கள் ஆரம்பித்திருந்த நிலையில், தற்போது போர் நிறுத்த ஒப்பந்தம் தொடர்பான ஆலோசனைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இந்தப் பேச்சுவார்த்தையில் பாகிஸ்தானின் மத்தியஸ்தம் சிறப்பானது எனப் பாராட்டிய ட்ரம்ப், ஒப்பந்தம் கையெழுத்தாகும் பட்சத்தில் இஸ்லாமாபாத் செல்லத் தயார் என்றும் தெரிவித்துள்ளார். இந்த ஒப்பந்தத்தின் மூலம் கச்சா எண்ணெய் விநியோகம் சீராகும், ஹார்முஸ் நீரிணையில் கப்பல் போக்குவரத்து இயல்பு நிலைக்குத் திரும்பும் மற்றும் அணு ஆயுதக் கட்டுப்பாடுகள் உள்ளிட்ட அமெரிக்காவின் நிபந்தனைகளுக்கு ஈரான் சம்மதம் தெரிவித்துள்ளது என்றும் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார். 2006ஆம் ஆண்டு ஜேர்ஜ் புஷ் பாகிஸ்தான் சென்றிருந்த நிலையில், அதன்பின்னர் அமெரிக்க ஜனாதிபதிகள் எவரும் பாகிஸ்தான் செல்லவில்லை. (எ-இ)

# இந்த ஆண்டு இறுதிக்குள் தேர்தலை நடத்த வாய்ப்பு

## தேர்தல்கள் ஆணைக்குத் தலைவர் நம்பிக்கை

கொழும்பு, ஏப்.18

இலங்கையில் நீண்டகாலமாகத் தாமதமடைந்து வரும் மாகாண சபைத் தேர்தல்களை இந்த ஆண்டு இறுதிக்குள் நடத்துவதற்கான வாய்ப்புகள் உள்ளன என்று தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க நம்பிக்கை வெளியிட்டுள்ளார். மாகாண சபைத் தேர்தல் சட்டத்தில் 2017ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட திருத்தத்தின் காரணமாக ஏற்பட்ட தொகுதி எல்லை நிர்ணயச் சிக்கல்களே இந்தத் தாமதத்துக்குப் பிரதான காரணமாகும். இதுவரையில் எல்லை நிர்ணய அறிக்கை நாடாளுமன்றத்தால் அங்கீகரிக்கப்படாத நிலையில், தற்போது இந்த சட்டச் சிக்கல்களைத் தீர்க்க நாடாளுமன்ற விசேட செயற்குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

இந்தக் குழுவின் அடுத்தகட்ட நகர்வுகள் தொடர்பாகக் கருத்து தெரிவித்த ஆணைக்குழுவின் தலைவர், செயற்குழு தனது விதப்புரைகளை மூன்று மாதங்களுக்குள் சமர்ப்பிக்க வேண்டும் என்றும், அதன் அடிப்படையில் தேர்தல் முறையை நாடாளுமன்றம் விரைவாகத் தீர்மானித்தால் இந்த ஆண்டு தேர்தலை நடத்த முடியும் என்றும் சுட்டிக்காட்டினார்.

மக்களின் ஜனநாயக உரிமையை உறுதிப்படுத்த தேர்தல் முறையை இறுதி செய்வது நாடாளுமன்றத்தின் கைகளிலேயே உள்ளது என்றும் தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க தெரிவித்துள்ளார். (எ-இ)



# தாக்கப்பட்டு யுவதி உயிரிழப்பு!

கொழும்பு, ஏப்.18



நுவரெலியா வட்டவளை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட வெலிஓயா தோட்டத்தில் கூரான ஆயுதத்தால் தாக்கப்பட்டு யுவதியொருவர் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். இந்த சம்பவம் நேற்றுக் காலை இடம்பெற்றுள்ளதுடன் வெலிஓயா தோட்டத்தை சேர்ந்த 28 வயதுடைய யுவதியொருவரே உயிரிழந்துள்ளார்.

இந்த கொலை சம்பவத்துக்கான காரணங்கள் இதுவரையில் வெளியாகாத நிலையில் சம்பவம் தொடர்பான விசாரணைகளை வட்டவளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (எ-இ)

# கபில சந்திரசேனவின் விளக்கமறியல் நீடிப்பு

கொழும்பு, ஏப்.18

ஸ்ரீ லங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்தின் முன்னாள் பிரதம நிறைவேற்று அதிகாரி கபில சந்திரசேனவின் பிணை மனுவை கொழும்பு நீதிவான் நீதிமன்றம் நேற்று நிராகரித்தது. அவரது விளக்கமறியல் எதிர்வரும் 28ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளது.

எயார்பஸ் கொடுக்கல் வாங்கலில் இடம்பெற்ற முறைகேடு தொடர்பான குற்றச்சாட்டின் அடிப்படையில் கபில சந்திரசேன கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். (எ-இ)

# யாழ். மாவட்டச் செயலகத்தில் நடந்த உள்ளூராட்சி முற்ற கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஏப்.18

உள்ளூராட்சி முற்றக் கலந்துரையாடல் அண்மையில் யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் நடைபெற்றது.

யாழ்ப்பாண மாவட்ட செயலகம், வடமாகாண மகளிர் விவகார அமைச்சின் ஏற்பாட்டில், கிறிசலிஸ் நிறுவனத்தின் அனுசரணையுடன் இந்த உள்ளூராட்சி முற்றக் கலந்துரையாடல் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

மேலதிக அரசாங்க அதிபர் க. சிவகரன் மற்றும் வடமாகாண மகளிர் விவகார அமைச்சின் உதவிச் செயலாளர் திருமதி தாரணி கஜரூபன் ஆகியோரது இணைத் தலைமையில் இடம்பெற்ற கலந்துரையாடலில் கடந்த கூட்டத்தில் முன்வைக்கப்பட்ட பிரச்சினைகளின் முன்னேற்றங்கள் தொடர்பில் ஆராயப்பட்டது. தொடர்ந்து சமூகத்தில் அடையாளம் காணப்பட்டு இதுவரை தீர்க்கப்படாத பிரச்சினைகள் தொடர்பாக குடிசார் அமைப்புகளின் பிரதிநிதி கள் ஊராட்சி முற்றத்துக்கு முன்வைத்த கோரிக்கைகளின் அடிப்படையில், அவற்றிற்கான தீர்வுகள் மற்றும் ஆலோசனைகள் துறைசார்ந்த திணைக்களத் தலைவர்களால் வழங்கப்பட்டன. கூட்டத்தில் உதவி மாவட்டச் செயலாளர் செல்வி உ.தர்சினி, மாவட்ட பெண்கள் அபிவிருத்தி இணைப்பாளர் திருமதி கி.தயாபரி, பிரதேச செயலாளர்கள், தொடர்புடைய திணைக்களங்களின் அதிகாரிகள், கிறிசலிஸ் நிறுவனத்தின் திட்ட இணைப்பாளர் உள்ளிட்ட உத்தியோகத்தர்கள், விடய உத்தியோகத்தர்கள் யாழ்ப்பாண குடிசார் அமைப்புகளின் சம்மேளனத்தின் அங்கத்தவர்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரும் கலந்து கொண்டனர். (எ-இ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடுகளில் பதுங்கிய குற்றவாளிகள் சிக்கினர்!

டுபாய் உள்ளிட்ட மத்திய கிழக்கு நாடுகளில் மறைந்திருந்தவாறு இலங்கையில் போதைப்பொருள் கடத்தல் மற்றும் கொலைச் சம்பவங்களை இயக்கி வந்த பல குற்றவாளிகள், அந்த நாட்டுப் பாதுகாப்புப் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். இவ்வாறு கைது செய்யப்படும் இலங்கை குற்றவாளிகளை நாட்டுக்கு அழைத்து வருவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. தற்போது ஈரான் மத்திய கிழக்கு பிராந்திய நாடுகள் மீது தாக்குதல்களை மேற்கொண்டு வருவதால், ஈரானிய குற்றவாளிகளுடன் தொடர்புகளைப் பேணும் நபர்களைக் கண்டறிய அந்த நாடுகள் விசேட நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளது.

இதன் விளைவாக, இலங்கையைச் சேர்ந்த பல குற்றவாளிகள் ஏற்கனவே மத்திய கிழக்கு நாடுகளில் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ச-இ)



## காணி விற்பனைக்கு

பலாலி கிழக்கில்
செம்மண் காணி
விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 076 066 4652
(CS 61238)A

## வேலைவாய்ப்பு

அச்சுவேலியில் அமைந்துள்ள தொழிற்சாலை ஒன்றிற்கு (வயதெல்லை 22-55) ஆண் வேலையாட்கள் தேவை. தங்கிநின்று வேலை செய்யக் கூடியவர் விரும்பத்தக்கது.
(தங்குமிட வசதி, உணவு வசதி வழங்கப்படும்.)
சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
தொடர்புகளுக்கு: 077 777 50 68
(CS 61235)A


## மரண அறிவித்தல்



மண்ணில்
11 . 12 . 1947

விண்ணில்
16 . 04 . 2026

### தம்பிஜயா சிவலிங்கம்

(ஓய்வுபெற்ற தொழில்நுட்ப உத்தியோகத்தர் - நல்லூர் பிரதேசசபை)

நாவற்குழியைப் பிறப்பிடமாகவும் திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிஜயா சிவலிங்கம் கடந்த 16.04.2026 வியாழக்கிழமை இரவு இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிஜயா - அன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான பத்மநாதன் - ஞானசௌந்தரி தம்பதியரின் அன்பு மருமகனும், பத்மராணியின் அன்புக் கணவரும், தர்ஷன் (KSA), தனுஷன், சாரங்கன், சுபாஷினி, நிலுஜா ஆகியோரின் அன்புத் தந்தையும், சுகன்யா, ஜனகா வினோதினி ஆகியோரின் அன்பு மாமனாரும், சஸ்வின், லஸ்வின், செர்லின் டியோன்சிகா ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற சிவானந்தராஜா (Irrigation Enginer) மற்றும் லட்சுமணன் (Labour Officer), சிவநாதன் (Australia) சிவபாலன் (Australia) காலஞ்சென்றவர்களான சிவஞானசேகரம் (Canada) பரமேஸ்வரி மற்றும் ஈஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற சௌந்தரராணி மற்றும் ராஜேஸ்வரி, காலஞ்சென்றவர்களான குருச்சந்திரன், சண்முகலிங்கம் மற்றும் தவமலர், கமலாதேவி, சாலினி, இந்திராகாந்தி, பரதராஜன், குசேலராஜா, காலஞ்சென்ற சத்துருக்கராஜா மற்றும் கௌசல்யாதேவி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (19.04.2026) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 2.00 மணியளவில் திருநெல்வேலி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்,

38/29, அம்மன் வீதி,
திருநெல்வேலி.
தொ.இ. 077 948 5722 / 072 438 9407

தகவல்:
குடும்பத்தினர்

(cs.61226) (N-1)

## மரண அறிவித்தல்



### வல்லிபுரம் சிவசுப்பிரமணியம்

(உரிமையாளர் - மணியம்ஸ் ஸ்ரோர்ஸ், உடுவில்)

இருபாலை கிழக்கினைப் பிறப்பிடமாகவும், தொம்பை வீதி, உடுவில் கிழக்கினை வசிப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரம் சிவசுப்பிரமணியம் அவர்கள் நேற்று (17.04.2026) வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற திரு. திருமதி. வல்லிபுரம் கண்ணம்மா தம்பதியரின் அருமை மூத்த புதல்வரும், காலஞ்சென்ற திரு. திருமதி. சின்னத்தம்பி செல்லமுத்து தம்பதியரின் அன்பு மருமகனும், ஆனந்தபவானியின் ஆருயிர்க் கணவரும், சுபானந்தி (அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச செயலகம், தெல்லிப்பழை), சொரூபன் (மின் அத்தியட்சகர், இலங்கை மின்சார சபை), சிந்துராகவன் (உரிமையாளர், சிவாஸ் பந்தல் - உடுவில்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சதீஸ்குமார் (முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர், பிரதேச செயலகம், தெல்லிப்பழை), கஜந்தி ஆகியோரின் அன்பு மாமனாரும், லோகலக்ஸன், ரக்ஷிதா, விகாஷ், அனன்யா ஆகியோரின் ஆசைப் பேரனும், காலஞ்சென்றவர்களான இந்திராணி, செல்வராணி, இராமநாதன் மற்றும் சகுந்தலாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரனும், யோகேஸ்வரன், மகேசன், சிவராஜா, வேலுப்பிள்ளை, துரைசிங்கம், மகாலக்ஷ்மி மற்றும் காலஞ்சென்ற கந்தராசா ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (19.04.2026) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 09.00 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக பூதவுடல் பூவோடை இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர் மற்றும் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

சுபானந்தி (மகள்) - 0777153560
சொரூபன்(மகன்) - 0779586880
சிந்துராகவன் (மகன்) - 0764313466
சதீஸ்குமார் (மருமகன்) - 0778002051


தகவல்:
குடும்பத்தினர்

தொம்பை வீதி, உடுவில் கிழக்கு, சுன்னாகம்.

(CS 31611)A

## மரண அறிவித்தல்

தோற்றம்
31 . 10 . 1952



மறைவு
15 . 04 . 2026

### வரதராசா குமாரசாமி

(தங்கராசா)

இணுவில் கிழக்கு, அங்களப்பாயைப் பிறப்பிடமாகவும் இணுவில் மேற்கு வட்டுவினியை வசிப்பிடமாகவும் கொண்ட வரதராசா குமாரசாமி (தங்கராசா) அவர்கள் 15.04.2026 புதன்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வரதராசா சிதம்பரேஸ்வரி தம்பதி யரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான முதலித்தம்பி கனகமணி தம்பதியரின் அன்பு மருமகனும், தயாநிதி (தயா) அவர்களின் பாசமிகு கணவரும், பார்த்தீபன் (கொழும்பு), அபிராம் (UK), தசாங்கினி ஆகியோரின் அன்புத் தந்தையும், நிரோஜினி (கொழும்பு), மாதுர்யா (UK), தீபன் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (19.04.2026) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக இணுவில் காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர் மற்றும் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இணுவில் மேற்கு,
வட்டுவினி,
தொ.பே:077 355 8378.

தகவல்:
குடும்பத்தினர்

(CS 31617)A

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாளைமறுதினம்...

இது தொடர்பில் அந்தத் திணைக்களம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் உள்ளதாவது:-

நாட்டின் கணிசமான பகுதிகளில் தற்போது கடும் வெப்பமான காலநிலை நீடித்து வருகின்றது. நாளை மறுதினம் 20ஆம் திகதிமுதல் பரவலாக மழை கிடைக்கும் வாய்ப்புள்ளது. குறிப்பாக மாலையிலும், இரவிலும் இடியுடன் கூடிய கனமழைக்குச் சாத்தியம் உள்ளது. இடியுடன் மழை பெய்யும் சந்தர்ப்பங்களில் தற்காலிகமாக பலத்த காற்று வீசக்கூடும் என்பதால், மக்கள் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்வது அவசியமானது - என்றுள்ளது. (அ-ம)

## மே 15ஆம்...

கப்பட்ட காணிகளின் உரிமையாளர்களுக்கு உறுதியளித்துள்ளார்.

திஸ்ஸ விகாரை அமைந்துள்ள காணிகளை அளவீடு செய்து அவற்றை விடுவிக்கும் பணிகள் நேற்று இடம்பெறவிருந்தன. எனினும், தனக்கு அதுதொடர்பில் அறிவிக்கப்படவில்லை என்றுகூறி திஸ்ஸ விகாரையின் விகாராதிபதி ஒத்துழைப்பு வழங்க மறுத்த நிலையில், காணி அளவீட்டுப் பணிகள் நேற்றுக் கைவிடப்பட்டன.

இவ்வாறான நிலையிலேயே, அனைத்துத் தரப்பினரையும் ஒருங்கிணைத்து மே மாதம் 15ஆம் திகதிக்குள் காணிகள் அளவீடு செய்யப்படும் என்று, யாழ். மாவட்டச் செயலர் மருதலிங்கம் பிரதீபன் காணி உரிமையாளர்களிடம் வாக்குறுதி வழங்கியுள்ளார்.

இதன்போது யாழ். மாவட்ட மேலதிக செயலர் (காணி) பா.ஜெயகரன், தெல்லிப்பழைப் பிரதேச செயலாளர், சிரேஷ்ட நில அளவைத் திணைக்கள அத்தியட்சகர், காணி நிர்ணயத் திணைக்கள உத்தியோகத்தர்கள் ஆகியோரும் உடனிருந்தனர். (அ-ம-26)

## இனப்பிரச்சினைத்...

மேலும் உள்ளதாவது:-

தமிழ்த்தேசியப் பேரவையால் பெப்ரவரி மாதம் 15ஆம் திகதி சிவில் அமைப்புகள், அரசியல் தரப்புகள், துறைசார் நிபுணர்கள், தமிழ்த்தேசிய செயற்பாட்டாளர்கள் மற்றும் மதத்தலைவர்கள் உள்ளிட்ட சகல தரப்பினரும் அழைக்கப்பட்டு யாழ்ப்பாணம் நல்லூரில் அமைந்துள்ள இளங்கலைஞர் மண்டபத்தில் அரசியலமைப்பு செயன்முறைகள் தொடர்பான விரிவான கலந்துரையாடலொன்று நடத்தப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலின்போது இனப்பிரச்சினைக்கான தீர்வாக ஒற்றையாட்சிக்கு உட்பட்ட எந்த வடிவிலான தீர்வையும் நிராகரிப்பது எனவும், திம்பு கோட்பாட்டை அடிப்படையாகக்கொண்டு தீர்வுத்திட்ட வரைவைத் தயாரிப்பது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

அந்தச் செயன்முறையை முன்னெடுத்துச் செல்வதை இலக்காகக்கொண்டு குறித்த கூட்டத்தில் கலந்துகொண்ட சிவில் அமைப்புகள், அரசியல் தரப்புகள், மதத்தலைவர்கள் மற்றும் துறைசார் நிபுணர்களை உள்ளடக்கிய 'ஈழத் தமிழர் அரசியலமைப்பு நிர்ணயப் பொதுச்சபை' இயங்கும் எனத் தெரிவிக்கப்பட்டதுடன், இனப்பிரச்சினைக்கான தீர்வாகதமிழர்தரப்பின்நிலைப்பாட்டைக் கூட்டாக முன்வைப்பதற்கான தீர்வுத்திட்ட வரைவைத் தயாரிப்பதற்குரிய வழிநடத்தல் குழுவைத் தெரிவுசெய்து அறிவிப்பது என்றும் உடன்பாடு காணப்பட்டது.

இந்தச் செயன்முறைகளை முன்னெடுத்துச் செல்லும் ஒருங்கிணைப்பாளராக கலாநிதி தி.விக்னேஸ்வரன் செயற்படுவார் என்றும் இணக்கம் காணப்பட்டது. இதன்படி தற்போது வழிநடத்தல் குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது.

முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி தி. விக்னேஸ்வரன், தமிழ்த்தேசியப் பேரவையின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி இ.ஜெயந்திரன், முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி ஏ.சரவணபவன், சிரேஷ்ட சட்டத்தரணி கலாநிதி கு.குருபரன், போராளிகள் நலன்புரிச் சங்கத்தின் தலைவர் பிரபாகரன், தமிழ் சிவில் சமூக அமையத்தின் சார்பில் மருத்துவர் எஸ்.குமாரவேள் மற்றும் அ.கஜேந்திரன், மூத்த அரசியல் ஆய்வாளர் ம.நிலாந்தன், அடையாளர் கொள்கை ஆய்வுக்கான நிலையத்தின் சார்பில் அ.அனுசானி, குடிசார் அமைப்புகளின் சம்மேளனத்தின் சார்பில் சுவந்தினி சிவஞானராஜ், அருட்தந்தை சத்தியசீலன், தமிழர் மரபுரிமை பேரவை உறுப்பினர் விமலசேகரன் வசந்தன், சிரேஷ்ட சட்டத்தரணி ஜெ.ஜெயரூபன், தமிழ் சிவில் சமூக அமையத்தின் சார்பில் பொ.ந.சிங்கம், அரசறிவியல் துறை முதுநிலை விரிவுரையாளர் பேராசிரியர் கே.ரி.கணேசலிங்கம், ஓய்வுநிலை பேராசிரியர் ஏ.சூசை ஆனந்தன், சிரேஷ்ட சட்டத்தரணி சி.அ.யோதிலிங்கம், சிரேஷ்ட சட்டத்தரணி எஸ்.விஜயகுமார், முதுநிலை விரிவுரையாளர் மாரிமுத்து பிரகாசன், மன்னார் பிரஜைகள் குழு சார்பில் அருட்தந்தை மார்க்கஸ், ஜனநாயக தமிழரசுக்கட்சயின் தலைவர் ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசா, தமிழ்த்தேசியக் கட்சியின் தலைவர் சிரேஷ்ட சட்டத்தரணி ந.சிறீகாந்தா, தமிழ்த்தேசிய பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசன், சிரேஷ்ட சட்டத்தரணி க.சுகாஸ், சிரேஷ்ட சட்டத்தரணி ந.காண்டீபன், தமிழ்த்தேசியப் பேரவை சார்பில் க.அருந்தவபாலன், தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் பொதுச்செயலாளர் செ.கஜேந்திரன், சட்ட மற்றும் கொள்கைகளுக்கான ஆய்வு நிலையத்தின் ஆய்வாளர் சிவகுமார் சிவகஜன் ஆகியோர் ஈழத்தமிழர் அரசியலமைப்பு நிர்ணயப் பொதுச்சபையின் வழிநடத்தல் குழுவில் அங்கம் பெற்றுள்ளனர். அத்துடன் இந்தக் குழுவில் வடக்கு, கிழக்கு மாகாணங்களிலிருந்தும் புலம்பெயர் தேசங்களில் இருந்தும் உறுப்பினர்கள் உள்வாங்கப்படுவர்.

இந்த வழிநடத்தல் குழுவானது தமிழர் தேசமும் அதன் தனித்துவமான இறைமையும் அங்கீகரிக்கப்பட்ட அடிப்படையில், முழுமையான சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்கும் வகையில் தமிழர் தேசத்துக்கும் சிங்கள தேசத்துக்கும் இடையில் கைச்சாத்திடப்பட வேண்டிய சமூக ஒப்பந்த வரைவைத் தயாரிக்கும். அதேபோன்று தமிழர் தேசமும் அதன் தனித்துவமான இறைமையும் அங்கீகரிக்கப்பட்ட அடிப்படையில் முழுமையான சுயநிர்ணய உரிமையைக் கூட்டாட்சி முறைமைக்குள் அனுபவிப்பதற்கான விரிவான தீர்வுத்திட்ட வரைவு ஒன்றையும் தயாரிக்கும்.

இந்தக் குழுவானது தீர்வுத்திட்ட வரைபு உருவாக்க செயன்முறைகளை முன்னெடுக்கும்போது, தமிழ் மக்கள் பேரவையால் தயாரிக்கப்பட்ட அரசியல் தீர்வுத்திட்ட வரைபு, இடைக்கால தன்னாட்சி அதிகாரக் கட்டமைப்புக்கான யோசனைகள், சர்வதேச மட்டத்திலுள்ள தேசங்களை அங்கீகரிக்கக்கூடிய கூட்டாட்சி முறைமைகள், புலம்பெயர்ந்து வாழும் தமிழ் மக்கள் தரப்பிலிருந்துவரும் முன்மொழிவுகள் போன்ற யோசனைகளைக் கருத்தில் கொண்டு, அவற்றின் சாராம்சங்களையும் அடிப்படை கோட்பாடுகளையும் ஒருங்கிணைத்த விரிவான மற்றும் பொதுவான அரசியல் தீர்வுத்திட்ட வரைபை உருவாக்கும்.

இந்தச் செயல்முறையின் ஆரம்ப கட்டமாக, குறித்த வழிநடத்தல் குழு ஒரு உத்தேச அறிக்கையைத் தயாரிக்கும். அதனைத் தொடர்ந்து, அந்த உத்தேச அறிக்கை பொதுமக்களது கருத்துகளை அறிவதற்காக வெளியிடப்பட்டு, வடக்கு-கிழக்கு தாயகப் பிரதேசங்களில் வாழும் மற்றும் புலம்பெயர்ந்து வாழும் தமிழ் மக்களுடனும், குடிசார் அமைப்புகளுடனும், அரசியல் சமூக வகிபாகக்காரர்களுடனும் பொருத்தமான துறைசார் ஆர்வலர்களிடமிருந்தும் கருத்துக்கள், பரிந்துரைகள் மற்றும் ஆலோசனைகள் பெறப்படுவதுடன் திறந்த மற்றும் வெளிப்படையான கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்படும்.

இவ்வாறு பெறப்படும் கருத்துகள் மற்றும் பரிந்துரைகள் அனைத்தும் முறையாக ஆய்வு செய்யப்பட்டு பரிசீலிக்கப்பட்ட பின்னர், அவற்றைக் கருத்தில் கொண்டு இறுதி அரசியல் தீர்வுத்திட்ட வரைபு தயாரிக்கப்பட்டு நிறைவு செய்யப்படும்.

இந்தக் குழுவால் தயாரிக்கப்படும் இறுதி யோசனையை தமிழ்த் தேசத்தின் ஏகோபித்த தீர்வுத்திட்ட முன்மொழிவாக முன்வைப்பதே இந்த வரைபு உருவாக்கத்தின் நோக்கமாகும். இந்தக் குழுவானது அடுத்துவரும் மூன்று மாதங்களுக்குள் தனது உத்தேச அரசியல் தீர்வுத்திட்ட வரைபை முன்வைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது - என்றுள்ளது. (அ-ம)

## பேருந்து - ...

வரே இவ்வாறு உயிரிழந்தார். கடந்த 15ஆம் திகதி ஓட்டோவைச் செலுத்தியவாறு புதுக்குடியிருப்புக்குச் சென்றபோது, பரந்தன் றெட்பானா சந்தியில் ஓட்டோவும் பேருந்தும் மோதி விபத்துக்கு உள்ளாகின. இதன்போது படுகாயம் அடைந்த அந்த முதியவர், முதற்கட்ட சிகிச்சைக்குப் பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் நேற்று சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார். (அ-ம-26)

## வாள்களுடன்...

மூன்று இளைஞர்கள் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளனர். வாள்களுடன் இளைஞர்கள் நடமாடுகின்றனர் என்று பொலிஸாருக்கு வழங்கப்பட்ட இரகசியத் தகவலுக்கு அமையவே இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. மேலதிக விசாரணைகளைத் தொடர்ந்து அவர்களை நீதிமன்றத்தில் முற்படுத்தும் நடவடிக்கைகள் தற்போது இடம்பெற்று வருகின்றன. (அ-ம-27)

## அன்னை...

கரைச்சி பிரதேசசபைத் தவிசாளர் அருணாசலம் வேழமாலிகிதன் தலைமையில் இந்த அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெற்றன. (அ-ம-113)

## பதவி...

பதவி விலகியுள்ளனர். நிலக்கரி இறக்குமதியில் இடம்பெற்ற மோசடிகள் தொடர்பில் வலுசக்தி அமைச்சருக்கு எதிராக அண்மைய நாள்களாகக் கடும் விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன. அவர் பதவி விலகவேண்டும் என்று எதிர்க்கட்சிகள் தொடர்ச்சியாக வலியுறுத்திவரும் நிலையில், மோசடிகள் தொடர்பில் விசேட குழு அமைக்கப்பட்டு மேலதிக விசாரணைகள் இடம்பெற்றன. இவ்வாறான நிலையிலேயே, வலுசக்தி அமைச்சர் குமார ஜயக்கொடி மற்றும் அமைச்சின் செயலாளராகப் பணியாற்றிய உதயங்க ஹேமபால ஆகியோர் நேற்றுப் பதவி விலகியுள்ளனர்.

குமார ஜயக்கொடி தனது பதவி விலகல் கடிதத்தை நேற்றுப் பிற்பகல் ஜனாதிபதியிடம் கையளித்தார் என்று தெரிவிக்கப்படுகின்றது. நிலக்கரி இறக்குமதி தொடர்பான சர்ச்சைகளை ஆய்வு செய்வதற்காக நியமிக்கப்பட்டுள்ள ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கும் வகையிலேயே இந்தப் பதவி விலகல் அமைந்துள்ளது என்றும் கூறப்படுகின்றது. இந்த இரு முக்கியமான பதவி விலகல்கள் குறித்து அரசாங்கம் இதுவரை அதிகாரபூர்வமான விளக்கத்தை வெளியிடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம)

## வரி...

ததாவது:-

மத்திய கிழக்குப் போர் காரணமாக, உலகின் பல நாடுகளைப் போன்று இலங்கையும் பாதிக்கப்படும் நிலையிலேயே உள்ளது. ஆனால், இலங்கை அதன் வரி வருமானத்தை மேம்படுத்துவதில் பெரும் முன்னேற்றம் கண்டுள்ளது. எனவே, நெருக்கடியை எதிர்கொள்ளவும், நெருக்கடியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆதரவு வழங்கவும் இலங்கையால் முடியும். பொருளாதார நெருக்கடியின் தொடக்கத்தில் இருந்ததை விட தற்போது இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் பகிரப்பட்ட வருமானம் இரு மடங்காக அதிகரித்திருக்கிறது. எனினும் சகலரையும் உள்ளடக்கியதும், வலுவானதுமான பொருளாதார வளர்ச்சியை உறுதிசெய்வதற்கு தற்போதைய மறுசீரமைப்புக்களை இலங்கை தொடர்ந்து முன்னெடுப்பது அவசியமாகும்-என்றார். (அ-ம)

## இந்திய...

டுள்ளது. கிளிநொச்சி - இரணைதீவு கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில், கடந்த 9ஆம் திகதி 10 இந்திய மீனவர்களும், கடந்த 14ஆம் திகதி 4 இந்திய மீனவர்களும் கைது செய்யப்பட்டிருந்தனர். அவர்கள் அனைவரும் நேற்றுவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த நிலையில், இந்த வழக்குகள் நேற்று மீண்டும் விசாரணைக்காக எடுக்கப்பட்டன. இதன்போதே, இந்திய மீனவர்கள் 14 பேரையும் எதிர்வரும் 22ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது. (அ-ம-55)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## கைவிடப்பட்டது...

திஸ்ஸ விகாரைக்காக ஆக்கிரமிக்கப்பட்ட காணிகள் தொடர்பில் யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் கடந்த 11ஆம் திகதி விசேட கலந்துரையாடல் இடம்பெற்றது. கடற்றொழில் அமைச்சர் இ.சந்திரசேகர், யாழ்ப்பாணம் மாவட்டச் செயலர் ம.பிரதீபன் மற்றும் காணிகளின் உரிமையாளர்கள் பங்கேற்ற அந்தக் கலந்துரையாடலில், காணிகளை விடுவிக்கும் நோக்கில் நிலஅளவீடு மேற்கொள்வது எனத் தீர்மானிக்கப்பட்டது.

இதன்படி 17 உரிமையாளர்களின் காணிகளை அளவீடு செய்வதற்கு நேற்று நடவடிக்கைகள் இடம்பெற்றன. காணிகளின் உரிமையாளர்கள், நிலஅளவைத் திணைக்களத்தினர், மாவட்டச் செயலர் என அனைத்துத் தரப்பினரும் அங்கு குழுமிய போதிலும், அளவீட்டுப் பணிகளுக்கு விகாராதிபதி ஒத்துழைக்காத நிலையில், அந்தப் பணிகள் அனைத்தும் கைவிடப்பட்டன.

அத்துடன், தையிட்டி விகாரை அமைந்துள்ள காணிகளை அளவீடு செய்வதைத் தடுத்து நிறுத்துமாறு வலியுறுத்தி விகாராதிபதி ஜின்தோட்டை நந்தாராம தேரரால் பலாலி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடும் வழங்கப்பட்டுள்ளது.

தென்னிலங்கையில் இருந்து வழிபாட்டுக்கு என அழைத்துவரப்பட்ட ஏராளமான சிங்கள மக்கள் விகாரையில் நேற்றுத் தங்க வைக்கப்பட்டிருந்தனர். அத்துடன், பொலிஸார், புலனாய்வுப் பிரிவினர் மற்றும் கலகமடக்கும் பொலிஸார் விகாரையில் நேற்றுக் குவிக்கப்பட்டு பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (அ-ம-26)

## மீண்டும்...

காலத்தில் பொதுமக்களுக்கு இருக்கும் தேவைகளைக் கருத்திற்கொண்டு, பெற்றோலிய வாகனங்களுக்கு கியூ.ஆர். முறையில் அல்லாமல் சாதாரண முறையின் கீழ் எரிபொருள்களை வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

இவ்வாறான நிலையிலேயே இன்று முதல் மீண்டும் கியூ.ஆர். முறை நடைமுறைக்கு வரும் என்று இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது. அத்துடன், எரிபொருள் விநியோகத்தில் தற்போது நடைமுறையில் உள்ள 'ஒற்றை இரட்டை' இலக்க முறைமை தொடர்ந்து அமுலில் இருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான சுற்றறிக்கை அனைத்து எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கும் நேற்றுமாலை அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (அ-ம-17)



மல்லாகம் பழம் பதி ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திருவிழா கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. (க-17)

ஐ.பி.எல். தொடரிலிருந்து

# வெளியேற்றப்படும் நிலையில் கொல்கத்தா நைட் ரைடர்ஸ்!

### நேற்று குஜராத்திடமும் தோல்வி



**ஐ.பி.எல். தொடரில் நேற்று இரவு நடைபெற்ற ஆட்டத்தில், குஜராத்திடம் தோல்வியடைந்தது கொல்கத்தா. இதுவரை 6 ஆட்டங்களில் விளையாடியுள்ள கொல்கத்தா அணி இதுவரை ஓர் ஆட்டத்திலேனும் வெற்றி பெறவில்லை. இதனால் அந்த அணி வெளியேற்றப்படும் நிலையில் உள்ளது.**

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற கொல்கத்தா அணி முதலில் துடுப் பெடுத்தாடத் தீர்மானித்து, 20 ஓவர்கள் நிறைவில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 180 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. அதிகபட்சமாக கமரூன் கிறீன் 79 ஓட்டங்களையும், றோவ்மன் பவல் 27 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் ரபாடா 3 விக்கெட்டுக்களையும், சிராஜ், அசோக் சர்மா இருவரும் தலா 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினார்கள்.

பதிலுக்குக் களமிறங்கிய குஜராத் அணிக்கு அணித்தலைவர் கில் நம்பிக்கையான ஆரம்பத்தை வழங்கினார். அவர் 86 ஓட்டங்களைக் குவிக்க 2 பந்துகள் மீதமிருக்கையில் வென்றது குஜராத். (ம)

# கரப்பந்தாட்டத் தொடர்

யாழ்ப்பாண மாவட்ட கரப்பந்தாட்டச் சங்கம் மற்றும் பிரித்தானிய தமிழ்ப் பாடசாலைகள் விளையாட்டு சங்கம் ஆகியன இணைந்து நடத்தும், பாடசாலைகளுக்கு இடையிலான 15 வயதுக்குட்பட்ட மாணவர்களுக்கான கரப்பந்தாட்டத் தொடர் ஆரம்ப நிகழ்வு இன்று சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்தாக் கல்லூரியில் இடம்பெறவுள்ளது. யாழ். மாவட்ட கரப்பந்தாட்டச் சங்கத் தலைவர் வி.செந்தூரன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ். மாவட்ட செயலக கரப்பந்தாட்ட விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர் எஸ். சதீஸ்குமார் பங்கேற்கவுள்ளார். (ச-இ)

**வீடு வாடகைக்குத்தேவை**


யாழ்ப்பாணம் மற்றும் நல்லூர் போன்ற பகுதிகளில் சிறிய குடும்பம் வசிப்பதற்கு சகல வசதிகளும் கொண்ட வீடு வாடகைக்குத்தேவை.

**077 776 3533**

**வேலையாட்கள் தேவை**

யாழ்ப்பாணத்தில் இயங்கிவரும் Restaurent க்கு Waiter மற்றும் Security வேலையாட்கள் தேவை.

**T.P:076 9670 556**



## 4 நாள்கள் கண்காட்சியில் 4 லட்சம் ரூபா வருமானம்

யாழ்ப்பாணம்,ஏப்.18

சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு கூட்டுறவாளர்களால் நடாத்தப்பட்ட கண்காட்சியால், 4 லட்சம் ரூபாவுக்கும் மேற்பட்ட வருமானம் ஈட்டப்பட்டுள்ளது.

யாழ்.வீரசிங்கம் மண்டப வளாகத்தில் கூட்டுறவு அமைப்புக்களால் நடாத்தப்பட்ட உள்ளூர் உற்பத்திப் பொருள்களின் கண்காட்சியும் விற்பனையும் கடந்த வாரம் 4 நாள்கள் தொடர்ச்சியாக இடம்பெற்றன. யாழ்.மாவட்டத்திலுள்ள உள்ளூர் உற்பத்தியாளர்களை ஊக்குவிக்கும் முகமாக இந்தக் கண்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டது. இதன் மூலம் இந்த வருடமும் எதிர்பார்த்த இலாபம் கிடைக்கப்பெற்றுள்ளது என்று கூட்டுறவு அமைப்புக்கள் தெரிவித்துள்ளன. (க-17)

**வேலையாட்கள் தேவை**

யாழ்ப்பாணத்தில் இயங்கிவரும் எமது நிறுவனத்திற்கு மேசன் மற்றும் கூலி வேலையாட்கள் தேவை. வெளி மாவட்டத்தில் இருந்து வருபவர்களுக்கு தங்குமிட வசதியும் வழங்கப்படும்.

**071 071 0333**

தரமற்ற நிலக்கரி இறக்குமதி

# ஐக்கிய மக்கள் சக்தியால் அடிப்படை உரிமை மனு

நுரைச்சோலை மின் உற்பத்தி நிலையத்துக்காக தரமற்ற நிலக்கரியை இறக்குமதி செய்ததன் மூலம் மக்களின் அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளதாகத் தெரிவித்து, அரசாங்கத்துக்கு எதிராக அடிப்படை உரிமை மீறல் மனுவைத் தாக்கல் செய்ய ஐக்கிய மக்கள் சக்தி தீர்மானித்துள் ளது.

கணக்காய்வாளர் நாயகம் அலுவலகம் அண்மையில் வெளியிட்ட அறிக்கையின்படி, தரமற்ற நிலக்கரியை இறக்குமதி செய்தமையால் அரசாங்கத்திற்கு 223 கோடி ரூபாவுக்கும் அதிக இழப்பு ஏற்பட்டுள்ளது.

தரமற்ற நிலக்கரியால் மின் உற்பத்திக்காக மேலதிக எரிபொருள் செலவிடப்பட்டுள்ளது. இந்தச் செலவு இறுதியாக மக்கள் மீதே சுமத்தப்படும். இது அவர்களின் வாழ்வாதார உரிமையைப் பாதிக்கும்.

தரமற்ற நிலக்கரியை விநியோகித்த நிறுவனத்திடம் இருந்து உரிய அபராதங்களை வசூலிக்க அரசாங்கம் இதுவரை எந்தவொரு ஆக்கபூர்வமான நடவடிக்கையும் எடுக்கவில்லை.

இந்த வழக்கு தொடர்பாக சிரேஷ்ட ஜனாதிபதி சட்டத்தரணிகள் குழு ஒன்று தேவையான ஆரம்பகட்ட ஏற்பாடுகளைச் செய்து வருகின்றது என்றும் ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது. (ச-இ)

**காணி விற்பனைக்கு உண்டு**

சாவகச்சேரி தனங்கிளப்பில் காணி விற்பனைக்கு உண்டு.

- 3 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 20 அடி அகல பாதையுடன் காணப்படுகின்றது.
- நிலப்பரப்புக் காணி 1960 ஆம் ஆண்டில் இருந்து தோம்பு வரலாறு உள்ளது.
- பூநகரி மன்னார் வீதியில் இருந்து 100m தூரத்தில் உள்ளது.
- நல்ல தண்ணீர் ஊற்று
- பரப்பு ஒன்றின் விலை ரூபா எட்டு இலட்சம். (800,000/-) இல் இருந்து.

**தொடர்பு:- 077 411 8851 076 248 4085 076 669 0996**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media